குடியாத்தம் - புதுப்பேட்டை

அருள்மிகு

படவேட்டு எல்லையம்மன்


திருக்கோயில் வரலாறு




குடமுழுக்குப் பெருவிழா

30-08-2007

வெளியிடுவோர் :
தி.செந்தில்நாதன்
LEEDS - UK



D.A.ஆதிமூலம் முதலியார்




கி.வெ.கணபதி முதலியார்

உ

குடியாத்தம் - புதுப்பேட்டை

அருள்மிகு படவேட்டு எல்லையம்மன்

திருக்கோயில் வரலாறு



ஆக்கம் :

புலவர். க. எத்திராசன், எம்.எ., எம்.எட்.,

குடியாத்தம்.

Publishers :

Dr. E. THIRUMURUGAN, M.D., MRCP (LONDON)

Specialist Registrar, Diabetes & Endocrinology, U.K.,

Dr. M. KAVITHA, M. Sc., Phd.

Research Fellow,

LEEDS UNIVERSITY,

LEEDS - U.K.

நூல் விவரம்


நூல் தலைப்பு	: குடியாத்தம், புதுப்பேட்டை, அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில் வரலாறு
பதிப்புரிமை	: ஆசிரியர்க்கே.
முதல் பதிப்பு	: செப்டம்பர் - 2007
மறுதோன்றி அச்சாக்கம்	: இந்துஸ்தான் பிரிண்டர்ஸ், குடியாத்தம்.
முகப்பு வண்ண அச்சமைப்பு	: எஸ். ஆர். கிராபிக்ஸ், வேலூர்.
படிகள்	: 1000
எழுத்துப் புள்ளி	: 11
விலை	: ரூ.15

பொருளடக்கம்



டி.ஏ. ஆதிமூலம் முதலியார்

என்றும்
எங்கள்
நினைவில் . . .



கி.வெ. கணபதி முதலியார்

அருள்மிகு. பட்டவேட்டு எல்லையம்மன் திருக்கோயில் பற்றி எழுந்த வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வந்தும், அஞ்சாநெஞ்சுரத்தோடு கோயில் சொத்துகளை மீட்டும், திருக்கோயிலுக்கு நிலையான வருவாயை உருவாக்கியும் திருக்கோயில் தொண்டில் என் கொள்ளுத்தாத்தா கி.வெ. கணபதி முதலியாரை அருந்துணையாக்கிக் கொண்டும் தொண்டுபுரிந்த தியாகி. டி.ஏ. ஆதிமூலம் முதலியார் அவர்கள் திருவடிகளையும்,


தியாகி. டி.ஏ. ஆதிமூலம் முதலியாரோடு சேர்ந்தும் அவருக்குப்பின் பல்லாண்டு காலமும் நேர்மையான நிருவாகம், திருமண மண்டபம் அமைத்தல், பரிவாரக்கோயில்கள் அமைத்தல், கோயில் சொத்துக்களைக் காப்பாற்றுதல் போன்ற அரும்பணிகளை அருள்மிகு பட்டவேட்டு எல்லையம்மன் திருவடிகளில் படைத்த என் கொள்ளுத்தாத்தா கி.வெ. கணபதி முதலியார் அவர்களின் திருவடிகளையும் வணங்கி இந்த நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அன்பன்,
தி. செந்தில்நாதன், LEEDS, U.K.
மற்றும் குடும்பத்தினர்.

புலவர். க. எத்திராசன், M.A., M.Ed., - துரை. சாலம்மாள்

Dr. E. திருமுருகன், M.D.,MRCP., LONDON -Dr. M. கவிதா, M.Sc., Phd.
Er. S. சிவசங்கரன், D.E.E., - E. பொன்மொழி, M.A., M.Ed.,
N. இரவிச்சந்திரன், M.A., B.Ed., - E. மங்கை, B.Sc., B.Ed.,
N. விஸ்வநாதன், M.A., B.Sc., M.Ed., - Er.E.திருமகள், AMIE,
Er. J. கணேசன், AME., - Dr. E. அன்பரசி, BSMS,
S. கார்த்திகேயன், R. தணிகைநாதன்,
S. அரிப்பிரியா, R. தமிழ்ச்செல்வன், T.V. மதிவாணன்,
T.V. பிரியதர்ஷிணி, G. சஞ்சய்வத்ஸவா.

திருக்கோயில் வரலாற்றில் இடம்பெற்ற
பெரியவர்கள்




M.B. சுப்பிரமணிய
முதலியார்




M.B. கிருஷ்ணசாமி
முதலியார்



M.V. பீமராஜா
முதலியார்



M.B. வெங்கடாஜல
முதலியார்




M.G. அமுர்தலிங்க
முதலியார், B.A.,B.L.,


திருக்கோயில் வரலாற்றில் இடம்பெற்ற பெரியவர்கள்




K.T. மார்க்கபந்து முதலியார்




K.M. முருகைய முதலியார்



K.M. கிருஷ்ணன் முதலியார்



S.N. நடராஜ முதலியார்



V.A. கனகசபை முதலியார், B.A.,

அணிந்துரை

புலவர். ச. கந்தசாமி, எம்.எ., எம்.எட்., எம்.ஃபில்,
தலைமை ஆசிரியர் (ஓய்வு)
45, அப்பு சுப்பையர் தெரு, பிச்சனூர், குடியாத்தம். வே.மா.

என் வணக்கத்திற்கும், மதிப்பிற்கும் உரிய புலவர். திரு. க. எத்திராசனார் அவர்களின் ஆன்ம நிறைவுதரும் படைப்பு, *குடியாத்தம் - புதுப்பேட்டை, அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில் வரலாறு* ஆகும்.

என் ஆசான் புலவர். க. எத்திராசனார் அவர்கள், குடியாத்தம் சமுதாயத் தொண்டு மன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, தமிழ்ப் பணி, அறப்பணி, ஆசிரியப்பணி, பிறர்க்கு உதவும் பெரும்பணி எனத் தன்நேரத்தை, நற்காரியங்களுக்காகவே முன்வந்து, முன்னின்று செய்யும் பண்பாளர்.

புதைந்து போயுள்ள புண்ணிய புராண வரலாற்றை, ஆதாரத்தோடு, *போற்றும் மனிதர் போற்றட்டுமே! நெஞ்சில் பொறுமை இல்லாதவர் தூற்றட்டுமே!* என்ற குறிக்கோளோடு மக்கள் மனங்கொள்ளும் வகையில், தன்னேரில்லாத் தங்கத் தமிழில் இந்நூலில் வாரி வழங்கியுள்ளார்.

இந்நூலில், குடியாத்தம் - புதுப்பேட்டை உதயமாகிய வரலாற்றையும், அங்குள்ள செங்குந்தர் குலமக்கள், மற்ற இனத்தவர்களையும், இணைத்துக்கொண்டு, மானம் காக்கும் ஆடை நெய்ய உதவியாக பாவோடும் தோப்பும், அல்லிக் குளமும், வாழ்வளிக்கும் அன்னைக்கு அருட்கோயிலும், திருமஞ்சனத்திற்கு ஒரு சேந்து கிணறும், விளக்கெரிக்க வருவாய்க்கென கடைகளும், அமைத்த வரலாறு படிப்பவர் மனதைப் பண்படுத்தும் வகையில் அமைந்திருப்பது பாராட்டிற்குரியதாகும்.

ஊர் கூடித் தேர் இழுப்பது போல், மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனக் கருதி, சான்றோர்களும், வள்ளல்களும், தியாகிகளும், பாமர மக்களும், அருட்செல்வர்களும், தாய்மார்களும் ஒன்றுகூடி அன்னைக்குச் சன்னதியும், நுழைவாயிலும், கோபுரமும், பிற தெய்வங்களுக்கு என சன்னதிகளும் அமைத்து ஆண்டுதோறும்,

மாதந்தோறும், குறிப்பாக ஆடிமாதத்தில் தேர்த்திருவிழாவும், பல்வேறு விழாக்களும் கொண்டாடி மக்களிடம் இறையுணர்வை ஊட்டியுள்ள செய்திகள் அன்னையின் அருட்சக்திக்குச் சான்றாய் அமைந்துள்ளது சாலச் சிறப்புடையதாகும்.

இக்கோயிலில் அமைந்துள்ள வேப்பமரத்தின் வரலாறு மிகப் புனிதமானது. சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் புகலிடமாய் இருந்து, தாமே குண்டுகளைத் தாங்கி உயிர்காத்த காட்சி, இன்று நம் கண்முன் காண்பதுபோல் பறைசாற்றிக் கொண்டு இருக்கிறது.

பல்வேறு விழாக்கள் நடந்தாலும், தன்மானத்திற்கும், உயிர்க்கும் தடைகள் வந்தாலும், கொண்ட குறிக்கோளில் குறியாய் இருந்து, மானம் காக்கும் நெசவு செய்து நுண்ணிய ஆடை நெய்து வழங்கிய செங்குந்தன், முருக பக்தன் உக்கல்நாதன் திருவிழா, செங்குந்தர்களின் நன்றி உணர்விற்குச் சான்றாய் இருந்து வருகின்றது பாராட்டிற்குரியதாகும்.

மிகப் பழமையான இத்திருக்கோயில் (30-08-2007) குடமுழுக்கிற்காகப் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு சீரோடு விளங்குகின்றது என்பதை இத்துடன் இணைத்துள்ள அனைத்து படங்களும் நம் சந்ததி -களுக்குப் பாடங்களாகி பின்பற்றக் கூடியதாக அமைந்துள்ளது பொருத்தமான ஒன்றாகும்.

குடியாத்தம், புதுப்பேட்டை, படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில் பற்றி ஆசிரியர் கூறியுள்ள வரலாற்றுச் செய்திகள் படித்து - பாதுகாக்க வேண்டிய ஆவணப் பதிவுகளே! ஒரு தலத்தின் வரலாறு எழுதுவது என்பது மேலைத் தவத்தின் பயனால்தான் முடியும்.

இத்தலவரலாற்று நூலைப் படிக்கும் எவரும் இறைவழிபாட்டில் மனம் ஒன்றுவர். இறையருள் அவர்பால் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை. எம் ஆசான், புலவர் பெருந்தகை அவர்களும், அவர்தம் குடும்பத்தாரும் பல்லாண்டு, பல்லாண்டு நலம் பல பெற்று வாழ்வாங்கு வாழ எம் அன்னை படவேட்டு எல்லையம்மனின் திருத்தாள் பணிந்து வேண்டி வணங்குகின்றேன்.

அன்பன்,
புலவர். ச. கந்தசாமி,
குடியாத்தம்.

ஆக்கியோனுரை

அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில் விமானத்தைச் சீரமைக்கத் தொடங்கிய நேரத்திலேயே திருக்கோயில் வரலாற்றை எழுதி வைக்கவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அரிய ஆவணங்கள் பலவற்றைத் தேடியும், படி எடுத்தும் திருக்கோயில் வரலாறு எழுதப்பட்டுள்ளது.

திருக்கோயிலின் முன்னாள் எழுத்தர் திரு. பி.எம். சுப்பிரமணி அவர்கள் தமக்குத் தெரிந்த சில தகவல்களைக் கொடுத்து உதவினார். ஐயப்ப பக்த சபையினர் சில தகவல்களைக் கொடுத்துதவினர். திரு. எம்.எம். மார்க்கசகாயம் அவர்கள் அரிய ஆவணம் ஒன்றைக் கொடுத்து உதவினார். திருக்கோயிலைப் பற்றி நேரடியாகத் தெரிந்தவர்கள், சொல்லியவற்றையும் இதில் சேர்த்துள்ளேன்.

குடியாத்தம், பிச்சனூர், வேதாந்தத் தமிழ் வாசக சாலையார் வெளியிட்ட **சைவ வினா-விடை**, புலவர். திரு. வே. பதுமனார் அவர்கள் எழுதி 2003-இல் வெளியிட்ட குடியேற்றம் அருள்மிகு **கருப்புலீஸ்வரர் தலவரலாறு** ஆகிய நூல்களிலிருந்தும், சில கருத்துக்களை எடுத்தாண்டுள்ளேன்.

அரிய புகைப்படங்கள் சிலவற்றைத் திரு. எம்.வி. சிவப்பிரகாசம் அவர்கள் வழங்கி உதவினார்.

புத்தகம் வடிவாக்கம் பெறும்போது உடனிருந்து, புலவர். திரு. ச. **கந்தசாமி**, M.A., M.Phil, M.Ed., அவர்கள் பெரிதும் உதவியதோடு அணிந்துரையும் வழங்கி இந்நூலை அலங்கரித்துள்ளார். இந்துஸ்தான் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. வி. நெடுஞ்செழியன், தம் சொந்தப் பணியாகவே எடுத்துச் செய்தார். அனைவர்க்கும் என் நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

வரலாறு என்பது என்றும் முற்றுப்பெற்றதும் இல்லை; முற்றுப்பெறுவதுமில்லை. முடிந்தவரை கிடைத்த தகவல்களைக் கொண்டும், எனக்கே நேரடியாகத் தெரிந்தவற்றையும் எழுதியுள்ளேன். மேலும், விரிவாக்கி எழுதப்படவேண்டிய வரலாறென்பதையும் ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளேன்.

இந்த வரலாற்று நூலாகிய மலரை, அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருவடிகளில் இட்டு அம்மையின் அருள்வேண்டித் துதிக்கின்றேன். ஆன்மீக உலகம் இந்த வரலாற்று நூலைப் பெரிதும் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

14, கொண்டசமுத்திரம் புதுத்தெரு,
குடியாத்தம் - 632 602.

அன்பன்,
க. எத்திராசன்,

1. இரேணுகாதேவி வரலாறு

அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஒன்றாக விளங்குவது **படைவீடு அம்மன் இரேணுகாம்பாள்** கோயிலாகும். இது திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இரேணுகாம்பாளின் அம்சமாகக் கருதப்படும் கோயில் அருள்மிகு படைவீட்டு எல்லையம்மன் கோயில் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. **அருள்மிகு படவேட்டு எல்லையம்மன்,** வேலூர் மாவட்டம், **குடியாத்தம் நகரத்தின் புதுப்பேட்டை** பகுதியில் எழுந்தருளி பக்தர்கள் அனைவருக்கும் அருள்பாலித்து வருகிறார். இத்திருக்கோயிலின் பெருமைமிகு வரலாற்றை அறிந்துகொள்வது அன்பர்கட்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாகும்.

அருள்மிகு. அன்னை இரேணுகாதேவி :

பர்வத மகராஜனின் மகளாகப் பிறந்தவர் இரேணுகா தேவி ஆவார். இவர் ஜமதக்கனி முனிவரைத் திருமணம் செய்துகொண்டார். பரசுராமன் உள்ளிட்ட நன்மக்களைப் பெற்றார். இரேணுகாதேவி தினந்தோறும் கமண்டல நதிக்குச் செல்வார். அங்குள்ள மணலைப் பானையாக்குவார். ஜமதக்கனி முனிவர் பூசைக்கு வேண்டிய புனித நீரைக் கொண்டு வருவார். அப்புனித நீரைக் கொண்டு நாள்தோறும் பூசை செய்வது ஜமதக்கனியாரின் வழக்கமாகும்.

தாயின் தலையைத் துண்டித்துக் கொண்டு வா!

இரேணுகாதேவி வழக்கப்படி கமண்டல நதிக்குச் சென்றார். ஜமதக்கனியாரின் பூசைக்குரிய புனித நீரைச் சுமந்துவர மணலைப் பானையாக்கினார். நதிக்கரையில் நின்றுகொண்டு பானையைத் தண்ணீருக்குள் அமிழ்த்தினார். அப்போது வானத்தில் சென்றுகொண்டிருந்த கந்தருவர் ஒருவரின் பிம்பம் தண்ணீரில் தெரிந்தது. அதை இரேணுகா தேவி வியந்து பார்த்தார். அவர் மனதளவில் மாசு பட்டார். அதனால், அவர் கையில் இருந்த பானை கரைந்தது. இந்த நிகழ்ச்சியை ஜமதக்கனி முனிவர் தம் ஞானக்கண்ணால் கண்டுணர்ந்தார். தம் மகன் பரசுராமனை அழைத்தார். *"மகனே! உன் தாயின் தலையைத் துண்டித்துக் கொண்டு வா"* எனக் கட்டளையிட்டார்.

என் தாய் உயிர்பெற வேண்டும்.

தந்தையின் ஆணையைத் தலைமேல் ஏற்ற பரசுராமன், மழுவாயுதத்துடன் புறப்பட்டார். தன் தாயைக் கண்டார். *"தந்தைசொல்*

மிக்க மந்திரமில்லை" என்பதை உள்ளத்தில் கொண்ட பரசுராமர், தன் மழுவாயுதத்தால் தாயின் தலையைத் துண்டித்தார். நதிக்கரையில் தண்ணீர் எடுக்கவந்த பெண்ணொருத்தி பரசுராமர் செயலைத் தடுக்க முயன்றார். அதனால், அவருடைய தலையையும் துண்டித்துவிட்டார். தமக்குத் தாமே தண்டனை வழங்குவார் போலத் தன் கையையும் துண்டித்துக்கொண்டார். மகனின் செயலைக் கண்டு மகிழ்ந்த ஜமதக்கனி முனிவர், "*மகனே! உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்,*" என்று கேட்டார். அதற்குப் பரசுராமர் தன் தந்தையை வணங்கி, "*தந்தையே! என் தாயை மீண்டும் உயிர்பெறச் செய்ய வேண்டும்*" என வேண்டினார்.

விதி வலிமையானது

பரசுராமர் வேண்டுகோளை ஜமதக்கனி முனிவர் ஏற்றுக்கொண்டார். மந்திர நீரை வழங்கினார். *உன் தாயின் தலையை உடலுடன் சேர்த்து வைத்து மந்திர நீரைத் தெளி! உன் தாய் உயிர் பெற்று எழுவாள்,* என்றார். மந்திர நீரோடு சென்ற பரசுராமர் வெட்டிய இடத்தில் கிடந்த மற்றொரு பெண்ணின் உடலில் இரேணுகாதேவியின் தலையைச் சேர்த்து மந்திர நீரைத் தெளித்தார். *ஊழின் பெருவலி யா உள* - என்கிறது திருக்குறள். மற்றொரு பெண்ணின் உடலில் இரேணுகா தேவியின் தலை ஒட்டி உயிர் வந்தது. *இது நம் செயல் இல்லை; தெய்வத்தின் செயல்* - என்றார், ஜமதக்கனி முனிவர்.

உடன்கட்டை ஏறினார் இரேணுகா தேவி

வேறுபட்ட உடலுடன் இரேணுகாதேவி தன் கணவர் ஜமதக்கனியாருக்குப் பணிவிடை செய்துவந்தார். காமதேனுப் பசுவும் இவர்களுக்குப் பணிவிடை செய்துவந்தது. இந்நிலையில், கார்த்த வீரியார்ச்சுனன் என்பவன் காமதேனுப் பசுவின் மீது ஆசைப்பட்டு அதைக் கவர்ந்துசெல்ல முற்பட்டான். இந்த அடாத செயலைக் கண்ட ஜமதக்கனியார் கார்த்த வீரியார்ச்சுனனைத் தடுத்தார். அவனோ ஜமதக்கனியாரையே கொன்றான்; காமதேனுப் பசுவைக் கவர்ந்து சென்றான். செய்வதறியாத இரேணுகாதேவி இறந்த தன் கணவனுடைய உடலைத் தீமூட்டி எரித்து அந்த நெருப்பில் தானும் வீழ்ந்து எரிந்தாள்.

சிரசே பிரதானம்!

இதை அறிந்த பரசுராமர் பெருங்கோபங்கொண்டார். அக்கோபத்தைக் கண்டு தேவர்கள் அனைவரும் நடுங்கினர். கார்த்தவீரியார்ச்சுனனைப் பரசுராமர் கொன்றார். இனி அரச குடும்பமே

இல்லாதொழியட்டும் என சாபமிட்டார். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் கோபத்தை விடுமாறு பரசுராமரை வேண்டினர். சிவபெருமான், ஜமதக்னி முனிவரை உயிர்பெற்று எழச்செய்தார். அன்னை இரேணுகாதேவியையும் உயிர்ப்பித்தார். அன்னையின் வேண்டுகோள்படி தலையை (சிரசு) மட்டும் பிரதானமாகக் கொண்டு இந்தப் பூமியில் பூசைக்குரிய உருவாகவும், உடலின் மற்றப்பகுதி ஜமதக்னி முனிவருடன் விண்ணுலகம் அடையவும் அருள்செய்தார்.

வேண்டும் வரம் தருகிறாள்

அன்றுமுதல் அன்னை இரேணுகாம்பாள் தன் தலையையே பிரதானமாகக் கொண்டு படைவீட்டில் எழுந்தருளி பக்தர்களுக்கு அவர்கள் வேண்டும் வரம் தருகிறாள்.

மேற்கண்ட செய்திகளே புராணங்கள் தரும் செய்திகளின் சுருக்கமாகும்.

வழித்துணை நாயனார் :

ஒரு காலத்தில் இன்றைய குடியாத்தம், மரங்களடர்ந்த காடாக விளங்கியது. வேலூர், ஆமூர் (ஆம்பூர்) ஆகிய இரண்டு ஊர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் ஒரு பகுதியான பத்துப்பாட்டு, சிறுபாணாற்றுப்படை என்ற நூலில் உள்ளன. ஆமூர்ப் பகுதியை நல்லியக்கோடன் என்ற மன்னன் ஆண்டு வந்ததாக அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேலூருக்கும், ஆமூருக்கும் இடையிலே விரிஞ்சிபுரம் மிகச் சிறந்த இடமாகப் பிற்காலத்தில் விளங்கியுள்ளது. காட்டுவழியிலே, பாலாற்றங்கரை ஓரம் பயணம் செய்வோருக்கு வழித்துணையாக விரிஞ்சிபுரம் விளங்கியுள்ளது. எனவே, அங்குக் கோயில் கொண்டுள்ள ஈசர் வழித்துணை நாயனார் (மார்க்கம் = வழி, பந்து = துணை, ஈசர் = நாயனார்) என இன்றுவரை அழைக்கப்படுகிறார். வேலூர், விரிஞ்சிபுரம், ஆமூர் ஆகிய ஊர்கள் இருந்த காலத்தில் நல்லூர் என்ற பெயரில் குடியாத்தம் இருந்திருக்கிறது. நல்லூரில் சோழராட்சிக்கு உட்பட்ட படை வீரர்கள் வாழ்ந்தனர். அவர்கள் சோழ அரசர்கட்கு உற்ற இடத்தில் - நேரத்தில் தம் உயிரையே வழங்கும் மெய்க் காப்பாளர்களாகவும் இருந்தனர். அன்றைக்கு அவர்கள் வேளைக்காரர்கள் எனப்பட்டனர். அன்றைக்கு அவர்கள் இடம் பெற்ற படை வேளைக்காரப் படை எனவும் வழங்கப்பட்டது.

2. புதுப்பேட்டை உருவானது

வழித்துணையானார்கள் :

பாலாற்றின் தென்கரையில் வேலூர் விளங்குகிறது. வேலூரிலிருந்து பாலாற்றின் தென்கரை வழியே ஆமூருக்குச் செல்வோர்க்கு விரிஞ்சிபுரமும், வேலூருக்கு எதிரே பாலாற்றின் வடகரையில் இருக்கும் காட்டுப்பாடியிலிருந்து நல்லூருக்குச் செல்வோர் நடுவழியில் தங்க **கீழ் வழித்துணையாங்குப்பமும்** நல்லூரிலிருந்து மேற்கே ஆமூருக்குச் செல்வோர் நடு வழியில் தங்க மேல் வழித்துணையாங்குப்பமும் உறுதுணையாக விளங்கின. பகல் நேரத்தில் மட்டுமல்லாமல் இரவு நேரத்திலும் பயணம் செய்வோர்க்கு உறுதுணையாக வேளைக்காரப்படையினர் உதவினர். அவர்கள் குதிரைகளைப் பயன்படுத்தி நடுவழியில் பயணிகளுக்கு விலங்குகளாலும், மனிதர்களாலும் துன்பம் நேராதபடி பாதுகாத்தனர். இவர்களுக்கு உதவியாக காடுகளில் சோதிலிங்க மரங்கள் வளர்க்கப்பட்டன. சோதிலிங்கக் கொழுந்துகளின் மீது படும் நிலவொளி, விண்மீன்களின் ஒளி, தீப்பந்தங்களின் ஒளி முதலியவை பலமடங்குகளாய் எதிரொளித்து இரவையும் பகலாக்கிவிடும். இந்த ஒளியையும் கையிலேந்திய குந்தப்படையையும் துணையாகக் கொண்டு வேளைக்காரப் படையினர் மக்களுக்குத் துணை செய்தனர். போர்க்காலங்களில் சோழமன்னர்களுக்குத் துணையாய் இருந்தனர். போரில்லாக் காலங்களில் மக்களுக்குத் துணையாய் இருந்தனர். **குந்தப்படை ஏந்தியதால் இவர்கள் குந்தர்கள்** என்று அழைக்கப்பட்டனர். நல்ல குணமும், நல்ல செயலும் உடையவர்களானதால் செம்மை என்ற அடைமொழி பெற்று **செங்குந்தர்கள்** எனப் போற்றப்பட்ட இவர்கள் தம் ஓய்வுக்காலத்தை வீணாக்காமல் மக்களின் மானத்தைக் காக்க, *செய்யும் தொழில்களில் மிகச் சிறந்த நெய்யும் தொழிலை* மேற்கொண்டனர். மாலை நேரங்களில் போர் பயிற்சிக்கான வீரவிளையாட்டுகளைப் பழகினர்.

கரிகால் வளவன் :

இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று, வெற்றிகொண்டு அங்கிருந்த வீரர்களைச் சிறைபிடித்து வந்து காவிரியின் இருபுறங்களிலும் கரைகட்டுவித்த சோழமன்னன் கரிகால்வளவன் ஆவான். காவிரியின் குறுக்கே கருங்கல்லும், பதப்படுத்திய களிமண்ணும் கொண்டு கரிகாலன் கட்டுவித்த கல்லணை இன்றும் நின்று விளங்கிச் 'சோழவளநாடு சோறுடைத்து', என்ற புகழை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. தமிழகத்துக்கே கடந்த

இரண்டாயிரம் ஆண்டுக்காலமாக சோறு வழங்கிக்கொண்டு இருப்பவன் கரிகால் வளவன் என்றால் மிகையாகாது. அவன் மக்கள் குடியிருப்புக்காக காடுகளை அழித்து நாடாக்கியுள்ளான். காடுகெடுத்து நாடாக்கிய கரிகாலன் எனவும் புகழப்படுகிறான்.

குடியேற்றமா? குடியாத்தமா?

வேலூருக்கும், ஆமூருக்கும் நடுவில் இருந்த நல்லூரைக் கரிகாலன் விரிவாக்கினான், என்ற கருத்தொன்று உள்ளது. இது விரிவாக ஆராயப்படவேண்டியதாகும். குடியாத்தம் நகரின் நடுவில் கௌண்டன்ய நதி உள்ளது. நீர்வளம் மிக்க நதியாக அது விளங்கியது. இந்த நதியின் தென்கரையில் **நல்லூர்** அமைந்திருந்தது. நீர்வளமும், நிலவளமும் கருதி மக்கள் பல்வேறு இடங்களிலிருந்து குடியேறினார்கள். இப்படி மக்கள் மன்னன் உதவியாலும், சொந்த நலம் கருதியும் **குடியேறிய இடம் குடியேற்றம்** எனப்பட்டது. நல்லூர் பிற்காலத்தில் **நெல்லூர்ப்பேட்டை**யாகிக் குடியேற்றம் நகரின் ஓர் அங்கமாகிவிட்டது. பிற்காலத்தில் குடியேற்றம் நகரம் மக்கள் நாவில் **குடியாத்தம்** எனக் களிநடனமாடத் தொடங்கிவிட்டது.

பல்வேறு ஆட்சிகள் :

வேலூர் பாலாற்றங்கரையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துத் தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முற்காலச் சோழராட்சிக்குப் பிறகு பல்லவராட்சி ஏற்பட்டது. பல்லவர் காலத்தில் **தொண்டை மண்டலம்** பகுதியில் வேலூர் மாவட்டம் இருந்தது. பல்லவராட்சிக்குப் பிறகு பிற்காலச் சோழராட்சி ஏற்பட்டது. பின்னர் சம்புவராயர்கள், நாயக்கர்கள், பிஜப்பூர் சுல்தான்கள், முகலாயர்கள் எனப் பலருடைய ஆட்சிகளுக்கும் இந்த மாவட்டம் உள்பட்டது. கி.பி. 1750 வரை வேலூர் மாவட்டம் மிக இன்றியமையாத அரசியல் நிகழ்ச்சிகளுக்கு இடமானது.

வட ஆர்க்காடு மாவட்டம் :

கி.பி.1751-இல் ஆங்கிலேயத் தளபதி இராபர்ட் கிளைவ் ஆர்க்காடு கோட்டையில் நுழைந்தான். ஆங்கிலேய ஆட்சிக்கு அடிகோலினான். 1799-இல் திப்பு சுல்தான் வீழ்ச்சி அடைந்தார். எனவே, ஆர்க்காடு நவாப் ஆங்கிலேயருக்கு அடங்கி நடக்கத் தொடங்கினான். 31-07-1801 அன்று கர்நாடகப் பகுதிகளை ஆளும் பொறுப்பை ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழு ஏற்றுக்கொண்டது. அப்போதுதான் வட ஆர்க்காடு மாவட்டம் முறையாக நிறுவப்பட்டது. மேலும், சென்னை மாகாணத்தில்

ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்கு வந்தது. ஆர்க்காடு நவாப்களின் காலத்தில் கர்நாடகத்தின் ஒரு பகுதியாக இருந்த வேலூர் மாவட்டம், ஆர்க்காடு சுபா என அழைக்கப்பட்டது. ஆர்க்காடு சுபாவின் வடபகுதி 1801-ஆம் ஆண்டில் வடார்க்காடு மாவட்டம் எனப் பிரிக்கப்பட்டது. அதன் தலைநகராகச் சித்தூர் மாறியது. 1911-இல் சித்தூரை தலைமையிடமாகக் கொண்டு சித்தூர் மாவட்டம் உதித்தது. வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு வடார்க்காடு மாவட்டம் உருவாயிற்று. பின்னர், திருப்பதியை உள்ளடக்கிய சந்திரகிரி வட்டம், சித்தூர் வட்டம், பலமனேரி வட்டம், குடியாத்தம் வட்டம் முதலிய வட்டங்கள் கொண்ட பகுதிகள் வட ஆர்க்காடு மாவட்டமாயின.

1928-இல் கங்குந்தி ஜமீன் பிரிக்கப்பட்டு சித்தூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. இப்படிப்பட்ட மாற்றங்களால், **குடியாத்தம் ஒருகாலத்தில் ஆந்திரப் பகுதியாக விளங்கியது.** பின்னர், தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது.

புதுப்பேட்டை உருவானது :

ஆட்சி மாற்றங்களுக்கு உள்பட்ட குடியாத்தத்தில் பலதிறப்பட்ட மக்கள் குடியேறத் தொடங்கினர். தெலுங்கர்கள், மராட்டியர்கள், கன்னடியர்கள், முகமதியர்கள் எனப் பலதிறப்பட்ட மக்கள் குடியேறியதால், தமிழ், தெலுங்கு, மராட்டி, கன்னடம் முதலியன குடியாத்தம் நகரமொழிகளாயின என்றாலும், ஆதி காலத்தில் நல்லூரில் கால்கொண்ட செங்குந்தர்களின் தொகையே இன்றளவும் மிகுதியாக உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். நகர் விரிவுக் காலத்தில் **நல்லூர், நெல்லூர்ப்பேட்டை**யானது. மற்றும் **காமாட்சியம்மன் பேட்டை, போடிப்பேட்டை, புவனேசுவரிப்பேட்டை, தரணம்பேட்டை, நடுப்பேட்டை, பிச்சனூர்பேட்டை** எனப் பல பகுதிகளாக குடியாத்தம் நகரம் விரிவடைந்தது. இந்த வகையில், பழைய குடியாத்தத்தின் இறுதிப் பகுதியாக புதுப்பேட்டை உருவாகியிருக்க வேண்டும். **புதியதாக உருவான பேட்டையைப் புதுப்பேட்டை** என்றே மக்கள் அழைத்துள்ளார்கள் என்று கருதலாம்.

3. படவேட்டு எல்லையம்மன் கோயில்

எல்லைக் கோயில் :

நகர எல்லையில், காவல்தெய்வங்களாகக் காளிதேவி முதலானோரை எழுந்தருளச் செய்து வணங்கி வருவது தமிழர்தம் மரபாகும். எல்லா ஊர்களிலும், ஊர் எல்லையில் வேடியப்பன் கோயில், ஊமை வேடியப்பன் கோயில் என அமைத்து வழிபட்டு வந்துள்ளதைக் கல்வெட்டுகளின் வாயிலாக நாம் அறிகிறோம். அந்த வகையில் குடியாத்தம் நகரின் வடகிழக்கு எல்லையில் காளிகோயில் அமைக்கப்பட்டுள்ளது. தென் கிழக்கு எல்லையில் பச்சையம்மன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அவருக்குத் துணையாய் **வாமுனி, செம்முனி, சடாமுனி** என்ற மூவரும் தென்கிழக்கு எல்லையைக் காத்து வருகின்றனர்.

படைவீட்டு எல்லையம்மன் :

குடியாத்தம் நகரத்தின் கிழக்குப் பகுதி, புதுப்பேட்டையானது. புதுப்பேட்டையில் படைவீட்டு எல்லையம்மன் கோயில் முன்னோர்களால் அமைக்கப்பட்டுள்ளது. போளூர் வட்டத்தில் உள்ள படைவீட்டு இரேணுகாதேவி கோயிலைப் பின்பற்றி படைவீட்டு எல்லையம்மன் கோயில் குடியாத்தத்தின் கிழக்கெல்லையில் அமைக்கப்பட்டமை போற்றுதற்கு உரியதாகும். **படைவீட்டு எல்லையம்மன்** நாளாவட்டத்தில் அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் என உச்சரிக்கப்பட்டு வருகிறாள்.

புதுப்பேட்டை :

குடியாத்தம் நகரத்தில் புதுப்பேட்டை, வரலாற்று முக்கியம் வாய்ந்த இடமாகும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பேரிடம் பெறுவது புதுப்பேட்டையே ஆகும். கள்ளுக்கடை மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டவரும், வெள்ளையனை வெளியேறச் சொல்லிப் போராடியவரும், பல்லாண்டுக் காலம் குடியாத்தக் காடுகளிலும், மதுராந்தகக் காடுகளிலும் தலைமறைவாக இருந்தவருமான தியாகி. D.A. **ஆதிமூலம்** அவர்கள், புதுப்பேட்டை வாசியே ஆவார். சுதந்திரப் போராட்டக் காலத்தில் காங்கிரஸுக்கென அலுவலகம் அமைக்கப்பட்டதும் புதுப்பேட்டையில் தான். காங்கிரஸ் அலுவலகம் *"காங்கிரஸ் வீடு"* என அக்காலத்தில் அமைக்கப்பட்டது. காங்கிரஸ் வீடு இருந்த தெருவுக்கே சிறப்பு கருதி காங்கிரஸ் வீட்டுத்தெரு (**மந்திரம்** = வீடு; **காங்கிரஸ் வீடு** = காங்கிரஸ் மந்திரம்) என்ற பெயர் இன்றும் வழங்கி வருகிறது. 15-08-1947-இல் புதுடில்லி செங்கோட்டையில் ஏற்றப்பட்ட இந்திய தேசியக் கொடியைத் தயாரித்துக் கொடுத்த **கோட்டா. வெங்கடாசல செட்டியார்**, புதுப்பேட்டை

வாசியே ஆவார். குடியாத்தம் புதுப்பேட்டை வாசிகள் உள்ளிட்டோர் தயாரித்துக் கொடுத்த இந்தியத் தேசியக் கொடிகள் மில்லியன் கணக்கில் இந்திய நாடு முழுவதும் பட்டொளி வீசிப் பறந்தன என்பதும் வரலாற்று உண்மையே. ஐ.நா. சபைக் கட்டடத்திலும், புதுப்பேட்டைவாசியான கோட்டா. வெங்கடாசல செட்டியார் தயாரித்துக் கொடுத்த கொடிகள் பறந்துள்ளன.

இந்திய சுதந்தரப் போராட்டத்துக்கும் குடியாத்தம், புதுப்பேட்டை, படவேட்டம்மன் கோயிலுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு.

வரலாற்று ஆவணங்களில் . . .

1961-இல் கணக்கு எடுக்கப்பட்டு, 1968ஆம் ஆண்டு மதராஸ் மாகாணக் கோயில்கள் **(வடார்க்காடு - நீலகிரி)** என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட நூலில், அருள்மிகு. படவேட்டு எல்லையம்மன் கோயிலைப் பற்றி உள்ள குறிப்புகள், இங்கே குறிப்பிடத் தகுந்தவையே ஆகும்.

கோயில் பெயர் : ஸ்ரீ படவேட்டு எல்லையம்மன் ஆலயம். புதுப்பேட்டை.
ஆயுள் காலம் : கணக்கிட முடியவில்லை.
பரப்பளவு : 0-10 ஏக்கர், கடைகள் : 10.

குடியாத்தத்தில் உள்ள பிற கோயில்கள் பற்றி எழுதும்போது, அவற்றின் ஆயுள்காலம், 100 ஆண்டுகள் முதல் 300 ஆண்டுகள் வரை எனக் குறிப்பிடும் அந்த நூல், **நெல்லூர்ப்பேட்டை ஸ்ரீ பாலசார்தூலீஸ்வரர் ஆலயம், புதுப்பேட்டை, ஸ்ரீ படவேட்டு எல்லையம்மன் ஆலயம் ஆகிய இரண்டின் ஆயுள்காலங்களும் கணக்கிட முடியவில்லை** எனக் குறிப்பிடுவது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

கணக்கிட முடியவில்லை :

குடியாத்தம் நகரத்தின் கிழக்கு எல்லையில் அருள்மிகு. படவேட்டு எல்லையம்மன் கோயில் அமைந்திருந்தது; கோயிலின் கிழக்கே பலமனேரிக்குச் செல்லும் சாலை, தெற்கே காட்பாடிக்குச் செல்லும் சாலை, அதற்கும் தெற்கே வட்டாட்சி அலுவலகம், குற்றவியல் நீதிமன்றம், சார் பதிவு அலுவலகம், சார் கருவூலம், கிளைச் சிறைச்சாலை ஆகியன அமைந்திருந்தன. தென்மேற்கில் புடைப்புப் பாறைச் சிற்பமாக எழுந்தருளிய ஆஞ்சநேயர் திறந்த வெளிக்கோயில், மேற்கே பீமராஜ முதலி தெரு, வடக்கே புதுப்பேட்டை பிள்ளையார் கோயில் தெரு. இந்த நான்கு எல்லைகளுக்கும் இடைப்பட்ட இடத்தில், தென்மேற்கு மூலையில் அருள்மிகு. படவேட்டு எல்லையம்மன் கோயில் இருந்தது. மூலக்கோயில் அமைக்கப்பட்ட காலத்தை வரையறுத்துத் தெரிந்துகொள்ளவும் முடியவில்லை.

ஆதியில், மரத்தடியில் கரகமாக அம்மனை எழுந்தருளச் செய்து மக்கள் வணங்கினர். பிறகு ஓலைக்கொட்டகை வேயப்பட்டது. அதன்பின்னர், சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டது. பல்லாண்டுகளுக்குப் பிறகு கருங்கல் கோயிலாகக் கட்டப்பட்டது என்பது சான்றோர் கூற்று ஆகும். இந்நிலையில் கோயிலின் ஆயுள் காலத்தைக் கணக்கிட முடியவில்லை என்பது உண்மையே அல்லவா?

கோயிலின் தென்கிழக்கு :

கோயிலின் கிழக்கில் புளியமரங்கள் அடர்ந்த தோப்பு இருந்தது. தென்புறம் குடிநீர்க்குழாய் இருந்தது. புதுப்பேட்டை வாசிகளுக்குக் குடிநீர் வழங்கிய குழாய் அதுவாகும். அதன் இணைப்பாகக் கால்நடைகளின் தேவைக்கென தண்ணீர் தொட்டி ஒன்றும் இருந்தது. செவ்வாய்க்கிழமைகளில் குடியாத்தத்தில் நடைபெறும் மாட்டுச்சந்தை அந்தக்காலத்தில் நல்ல பேரும் புகழும் பெற்றது ஆகும். சந்தைக்குக் கொண்டு வரப்படும் மாடுகளும், ஆடுகளும் தொட்டியில் நீரருந்திச் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தொட்டிக்குப் பின்னால் கோயிலின் தென்கிழக்கில் பருத்து வளர்ந்த **வேப்பமரம்** இருந்தது. இன்றும் உள்ளது. மகளிர் ஞாயிறு, வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்தில் படையலிட்டு வேப்பமரத்தைச் சுற்றி வந்து வணங்கும் காட்சியை என்றும் மறக்க இயலாது.

தோப்பும், குளமும் :

கோயிலின் வடக்கே ஒரு பெரிய தோப்பு இருந்தது. செங்குந்த மக்கள் பாவு தோய்வதற்காக வரிசையாகக் கற்கள் நடப்பட்டிருந்தன. கல்வரிசைகளை அடுத்து கிழக்கே ஒரு குளம் இருந்தது. குளத்துக்கும் கிழக்கே பாக்கத்திலிருந்து கௌண்டின்ய நதியை நோக்கிச் செல்லும் மணல் நிறைந்த கானாறு இருந்தது. மக்கள் காலை, மாலை இரு வேளைகளிலும் கானாற்று நீரில் குளிப்பர். தத்தம் துணிகளைத் துவைத்துக் கொள்வர். குளத்தில் அல்லி மலர்ந்திருக்கும். அக்குளத்து நீர் படவேட்டு எல்லையம்மனுக்குரிய மஞ்சன நீராகப் பயன்பட்டது. அல்லிப்பூ கோயில் பூசைக்குப் பயன்படுத்தப்பட்டது. குளத்துக்கும், கோயிலுக்கும் நடுவில் ஒரு சத்திரம் இருந்தது. அந்தச் சத்திரம், அயலூரிலிருந்து வருவோர்க்குத் தங்கும் விடுதியாகப் பயன்பட்டது. எத்தனைபேர் தங்கி இருக்கிறார்கள் எனக் கணக்கெடுத்து, வீடுதோறும் சென்று சோறும், குழம்பும் பெற்றுவந்து அவர்களின் வயிற்றுப் பசியைப் போக்குவது புதுப்பேட்டை சிறுவர்களுக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தருவதாகும்.

பள்ளிக்கூடம் :

படவேட்டு எல்லையம்மன் கோயில் சத்திரம், புதுப்பேட்டை சிறுவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மிகச் சிறந்த திண்ணைப் பள்ளிக்கூடமாகவும் திகழ்ந்தது. அ, ஆ, என எழுத்தையும், ஒன்று, இரண்டு, என எண்ணையும் அங்கே பிழையறப் பயின்றவர்கள் இன்றும் உள்ளனர். அங்கே கிடைத்த கல்வி தரமானது. துல்லியமானது.

தொழில் கூடம் :

அல்லி குளத்தைப் பற்றிக் குறிப்பிட்டோம். அல்லிகுளம் பிற்காலத்தில் தோய்வதற்குரிய பாவை (நூலை) ஊறவைக்கும் தொழில் கூடமாயிற்று. மறுநாள், தோயவேண்டிய பாவை முன்னாள் இரவே குளத்து நீரில் ஊறவைக்கும் பழக்கம் வந்தது. கோயில் திருமஞ்சனத்துக்குரிய நீருக்காகக் கோயிலுள்ளே **சேந்துகிணறு** தோண்டப்பட்டது. தம் வாழ்க்கையோடு இணைந்த - இயைந்த - கோயிலின்பால் மக்கள் ஈர்க்கப்பட்டனர்.

பூசையும், விழாவும் :

'சிறப்பொடு பூசனை' என்பார் திருவள்ளுவர். நெய்யும் தொழிலை மேற்கொண்ட வள்ளுவர், கோயில்களில் நாள்பூசையும், ஆண்டின் பலமுறை திருவிழாக்களும் நடைபெற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். செங்குந்தர்களின் நெசவுத்தொழில் சிறந்திருந்த காலத்தில் கோயிலில் நாள்தோறும் நடைபெற வேண்டிய பூசையும், ஆண்டுதோறும் நடைபெற வேண்டிய திருவிழாக்களும் சிறப்பாக நடந்தன.

கோயில் பணிகள் :

கோயில் பணிகள் சிறப்பாக நடைபெறப் பணியாளர்கள் தேவையல்லவா? அத்தகைய பணியாளர்களுக்கெனத் தனித்தனி ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. கோயிலைப் பாதுகாத்துச் செப்பனிடும் தொழிலாளர்களுக்கென இன்றைய காங்கிரஸ் வீட்டுத்தெரு ஒதுக்கப்பட்டிருந்தது. அவர்கள் திருக்கோயில் பணியோடு ஊர்ப்பணிகளையும் செய்து வந்தனர்.

பூசை செய்வோர் :

நாள்தோறும் பூசை செய்வோர்க்கென வீடுகள் ஒதுக்கப்பட்டன. பண்டாரங்கள் எனப்படும் அவர்கள் **பண்டார முத்தையன் தெருவில்** வாழ்ந்தனர். அவர்கள் தாங்களாக முன்வந்து திருக்கோயில் பணிகளை முற்றிலுமாகத் தம்மால் செய்ய இயலவில்லை எனத் தெரிவித்து முடிந்தவரை தொடர்ந்து கோயிலில் நாள்தோறும் பூசை செய்து வந்தனர்.

விளக்கெடுப்போர் :

கோயிலில் விளக்கு ஏற்றவும், திருவிழாக் காலங்களில் விளக்கெடுத்து வரவுமான பணியாளர்கட்குப் புதுப்பேட்டை, பிள்ளையார் கோயில் தெருவின் கிழக்குக் கோடியின் வடபுறத்தில் இடம் ஒதுக்கப்பட்டது. அவர்கள் வழிவழியாக அங்கேயே வாழ்ந்து வருகிறார்கள். படவேட்டு எல்லையம்மன் கோயில் பணி என்றால் இன்றும் தாமாகவே முன்வந்து சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

சீப்பு அறுப்போர் :

சீப்பு அறுக்கும் தொழிலாளர்களுக்கென இன்றைய அருணாசல நகரின் வடமேற்கு மூலையில் உள்ள கிணற்றுக்கு வடமேற்கில் இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. அங்கு வாழ்ந்த அம்மக்கள் கோயிலுக்கு வேண்டிய பணிகளைச் செய்தனர். சீப்புகளை அறுத்துக் கொடுத்தனர். காலச்சூழலில் சீப்பறுக்கும் தொழில் நசிந்தது. அவர்களும் வேறு தொழில்களைத் தேடிச் சென்றுவிட்டனர். இன்றும் படவேட்டு எல்லையம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு சீப்பறுப்போர் வாழ்ந்த இடத்தில் கரகம் புனையப்படுகிறது. அந்த இடத்தைத் தவிர்த்தால் கரகம் எடுக்க முடிவதில்லை, என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பல தொழிலாளர் :

கோயிலுக்கு வேண்டிய மரவேலை செய்யும் தச்சர்கள், இரும்பைக் காய்ச்சி, வேண்டிய பொருள்களைச் செய்துதரும் கொல்லர்கள் முதலிய பலருக்கும் தனித்தனியே இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. கோயில் செலவுகளுக்கான வருவாய் தரும் புளிய மரங்கள் அடர்ந்த புளியந்தோப்பு கோயிலுக்குரியதாக இருந்தது. காலப்போக்கில் மரங்கள் அழிக்கப்பட்டன. இத்தோப்புப் பகுதி இன்றைய திருவள்ளுவர் மேனிலைப்பள்ளியின் முதன்மைக் கட்டடப் பகுதியின் சரிபாதித் தென்புறப்பகுதியாக இருக்கிறது. அதன்மூலம் வருகின்ற வருவாய் கோயில் பணிகட்கு இன்றும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

கோயில் குளம் :

ஒருகாலத்தில் இன்றைய **ராபின்சன் குளமே** படவேட்டு எல்லையம்மன் **கோயிலின் குளமாகப்** பயன்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது. பாக்கத்து ஏரியிலிருந்து தண்ணீர் வந்து குளத்தை நிறைக்கும். **நல்ல தண்ணீர்க் குளம்** என்பது இக்குளத்தின் முற்காலத்துப் பெயராகும். இது ஐந்து ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. காலப் போக்கில் இக்குளம் பாழாகிவிட்டது. குளத்துக்கு நீர் ஈந்த கால்வாய்கள் அடைக்கப்பட்டுவிட்டன. குளத்தில் நீர் நிறைந்த காலத்தில் குளத்தைச் சுற்றியுள்ள கிழக்கு,

தெற்கு மற்றும் வடக்குக் கரைகளின் கீழ்வாழ்ந்த மக்கள் கைத்தறி நெசவுத் தொழில் செய்த செங்குந்தர்களும், சேணியர்களும், சாலியர்களுமே ஆவர். அவர்கள் எல்லாம் அன்று தம் தறிகளின் கால்குழியில் நீர் சுரந்து தொழில் செய்ய முடியவில்லையே என்று வருந்தினார்கள். அதனால் ஊர் குப்பைகளைக் கொட்டி குளம் தூர்க்கப்படுவதைக் கண்டும் காணாமல் இருந்துவிட்டனர். கால்வாய்கள் தூர்க்கப்படுவதைப் பற்றிக் கவலைப் படவேயில்லை. இன்றோ அங்கு வாழும் மக்கள் தம் வீடுகளில் தோண்டியுள்ள கிணறுகள், துளைக்கிணறுகளில் குளத்துக்குப்பை ஊறிய மழைநீர் அழுக்கு நீராய்ச் சுரப்பதைக் கண்டு கண்ணீர் சொரிகின்றனர். நல்லதண்ணீர்க்குளமாக இருந்த காலத்தின் இறுதிவரை புதுப்பேட்டையைச் சேர்ந்தவர்கள்தாம் குளத்துக் காவலாளிகளாக இருந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் **குப்பன்** என்பவராவார்.

மாடவீதிகள் :

படைவீட்டு எல்லையம்மன் கோயில் மாடவீதிகளாகப் பழங்காலத்தில், காங்கிரஸ் வீட்டுத் தெருவும், நல்ல தண்ணீர்குளத்தின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள பாதையும், மந்தைவெளி பெரியதம்பி தெரு, புதுப்பேட்டை பிள்ளையார் கோயில் தெருக்களுமாக விளங்கின. எல்லைக் கோயிலானமையால் கோயிலின் கிழக்குப்பக்கம் மாடவீதி இல்லையாயிற்று. ஆனால், இன்றோ எல்லா வீதிகள் வழியாகவும் அம்மன் திருவீதி உலா நடைபெறுகிறது. திருத்தேர்க்கோயிலும் அனைத்து வீதிகள் வழியாகவும் சென்றுவரும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

அல்லிக்குளமும், சத்திரமும் :

அருள்மிகு படைவீட்டு எல்லையம்மன் கோயிலில் நாள்தோறும் நடைபெற வேண்டிய பூசையும், ஆண்டுதோறும் நடைபெற வேண்டிய திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. கைத்தறி நெசவுத்தொழிலால் மக்களிடம் வருவாய் சீராக இருந்தகாலத்தில் கோயில் பணிகளும் சீராக நடைபெற்றன. **16 புடவைகள் நெய்வதற்குரிய** பாவுதோயும் முறை மெல்லக் குறையத் தொடங்கியது. ஏனென்றால் நூல் புடவையின் தேவை நாளுக்கு நாள் குறைந்தது. ஆனால், பாவை ஊறவைக்கப் பயன்பட்ட அல்லிக்குளம் மெல்ல மெல்லக் கவனிப்பாரின்றிக் குட்டையானது. பாவு தோயப்பயன்பட்ட நிலுவைக் கற்கள் ஒவ்வொன்றாகக் காணாமல் போயின. அல்லி மலர் பூத்தகுளம் குட்டையாகிக் கானாற்று நீர் வரவும் குறைந்தது. சாக்கடை நீரான காரணத்தால் மெல்ல அழிந்தது. மைதானமானது.

கால வேகத்தில் பயண வசதியும், விடுதிகளில் தங்கும் வசதியும் பெருகிய காரணத்தால் சத்திரத்தில் வந்து தங்குவார் இல்லையானது. தொடக்கப்பள்ளிகள் தோன்றியதால் திண்ணைப்பள்ளிக் கூடத்துக்கும் வேலை இல்லாமல் போனது. இப்படி ஒருபக்கம் சத்திரமும் கவனிப்பாரில்லாமல் போனது.

ஆலைத்துணிகளின் உற்பத்தி அதிகமானதால் கைத்தறித் துணிகளின் உற்பத்தியும் குறைந்தது. நூல் புடவைகள் மெல்ல மெல்ல மறைந்தன. அதனால், மக்கள் லுங்கிகள் தயாரிக்கத் தொடங்கினர். ஆலைகளில் லுங்கிகளும் தயாரிக்கப்பட்டதால், லுங்கி தயாரிப்பும் குறைந்தது. மொத்தத்தில் கைத்தறி நெசவுத் தொழில் மெல்ல மெல்ல அழிவை நோக்கிச் சென்றது. வருவாய் குறைந்து மக்கள் குடிக்கும் கஞ்சிக்கும், கட்டும் துணிக்கும் அலையத் தொடங்கினர்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

என்பது அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் கோயிலுக்கு முற்றிலும் பொருத்தமானது. கோயிலில் பூசை செய்யவும், திருவிழா செய்யவும் முடியாமல் போனது. கோயில் சொத்துக்கள் பராமரிப்பில்லாமல் போயின. கோயிலுக்குச் சொத்து இருந்தும் அந்தச் சொத்துக்களால் வருவாய் இல்லை. புதுப்பேட்டைவாசிகள் செய்வதறியாது திகைத்தனர்.

கோயில் சொத்துகளை வைத்திருந்தவர்கள் சரிவர வாடகை கொடுக்கமுடியாத நிலைக்கு ஆளானார்கள். இதைப் பற்றிய பூசலும், சண்டையும் எழுந்தன. கோயில் சொத்துகளைக் கையகப்படுத்திக் கோயிலில் தவறாமல் விளக்கெரிக்கவாவது செய்ய வேண்டுமே என்ற கவலை பலர் மனதில் தோன்றியது.

4. எழுச்சியும், வளர்ச்சியும்

தியாகி. D.A. **ஆதிமூல முதலியார்** தலைமையில் **கி.வெ. கணபதி முதலியார், இ.வ.வெங்கிடாசலம்** ஆகியோர் சேர்ந்தனர். அதனால், உள்பூசல் முதலில் மறைந்தது. நீதிமன்றம், காவல் நிலையங்களில் இருந்த வழக்குகள் முடிவுக்கு வந்தன; புகார்கள் தீர்க்கப்பட்டன. கோயிலுக்குரிய சொத்துகள் கோயிலுக்கே என்றானது. அப்போது மொத்தம் இருந்த சொத்துகளில் 2 ஏக்கர் 91 செண்ட் நிலம் தமிழக அரசின், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்களின் முன்னிலையில் ஏலம் விடப்பட்டது.

விளம்பரம்.

குடியேற்றம் டவுன் புதுப்பேட்டை ஸ்ரீ படவேட்டு எல்லை அம்மன் கோயிலுக்கு சம்பந்தப்பட்ட கீழே குறித்த நிலத்தை சர்க்கார் உத்திரவு G. O. M. S No. 1208 தேதி 20—3—1961 படி பகிரங்க ஏலத்தில் இந்து சமய அற நிலைய ஆட்சித்துறை இலாகா அதிகாரிகள் முன்னிலையில் மேற்படி அம்மன் கோயில் முன்பாக 9—8—1961 புதன்கிழமை காலை 10-மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்,

நிபந்தனைகள்

1. ஏலம் கேட்கும் நபர்கள் ஏலம் கேட்கும் முன்பு ரு. 2000/-ம் டிபாசிட் கட்டி ஏலம் கோரவேண்டியது.

2 ஏலம் எடுக்காதவர்களுடைய டிபாசிட் தொகையை ஏலம் முடிந்தவுடன் திருப்பிக்கொடுக்கப்படும்.

3. ஏலம் கேட்கும் நபர்கள் கிராம அதிகாரிகளிடமிருந்து 'சால்வன்சி சர்டிபிகேட்' ஒன்று பெற்று ஆஜர்படுத்தவேண்டியது

4. பொதுவாக அதிக ஏலம் கேட்பவர்களுக்கே ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படும்.

5 ஏலம் காயம் செய்யும் உரிமை இந்துமத அறநிலைய இலாகாவினுடைய அதிகாரத்திற்குட்பட்டது.

6. ஏலம் எடுத்தவர்கள் பாக்கித் துகையை (டிபாசிட்போக பாக்கியுள்ளதை) ஏலம் எடுத்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் தவறாமல் செலுத்தி தங்கள் சொந்த செலவிலேயே கிரய பத்திரம் பதிவு (ரிஜிஸ்டர்) செய்துகொள்ள வேண்டியது

7. 6-வது நிபந்தனையின்படி நடக்கத் தவறினால் ஏலம் ரத்து செய்வதுடன் டிபாசிட் ரூபாய் 2000/-ம் இறக்க நேரிடும். மேலும் சட்டப்படி மறுஏலத்தில் ஏற்படும் சகல கஷ்டநஷ்டங்களுக்கும் முதல் ஏலதாரரே பொறுப்பாளியாவார்.

8 காரணம் கூறாமலே ஏலத்தை நிறுத்தவோ அல்லது ஒத்திப் போடவோ அல்லது வேறு ஏதாவது நிபந்தனைகளிருந்தால் அதை சேர்க்கவோ தர்மகர்த்தாக்களுக்கு அதிகாரமுண்டு.

9. மேற்கண்ட எல்லா நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டும் உடன்பட்டும் ஏலம் கோரவேண்டியது. அப்படி மீறிய நபர்களின் ஏலத்தை ரத்து செய்ய தர்மகர்த்தாக்களுக்கு அதிகாரமுண்டு.

நிலத்தின் விபரங்கள்

குடியேற்றம் டவுன் 2-வது வார்டு டவுன் சர்வே 427ம் நெம்பர் ஏகரா 4, செண்டு 21-க்கு தீர்வை ரூபாய் 10—78 நயேபைசா; இதில் கோயில் கட்டிடம்உட்பட காட்பாடி ரோட்டுக்கு வடபுரம் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஏகரா 1, செண்டு 29 போக மீதி நிலத்தை பகிரங்கமாய் ஏலத்தில் விடப்படும். மற்ற விபரங்களை படவேட்டு எல்லை அம்மன் கோயிலில் உள்ள பிளானை பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

கி. வெ கணபதி,
டி. வ. வெங்கிடாசல முதலியார்,
தர்மகர்த்தாக்கள்.

D. A. ஆதிமூலம்,
தலைவர்,
தர்மகர்த்தாக்கள் குழு.

குடியேற்றம் 27—7—61.

ஸ்ரீ ராதாகிருஷ்ண அச்சகம்—குடியேற்றம்

ஏலத்தின் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு ஒரு ஏக்கர் 29 செண்ட் நிலத்தில் கடைகள் கட்டப்பட்டன. அந்தக் கடைகளுள் சில, கோயிலின் தென்புறமும் காங்கிரஸ் வீட்டுத்தெருவின் வடபுறமும் அமைந்துள்ளன. பெரும்பாலான கடைகள் காட்பாடி ரோடுக்கு வடக்கே வரிசையாகப் பலமனேரி ரோடு எல்லைவரை அமைந்துள்ளன. ஏலம் விடப்பட்ட நிலப்பகுதி, பழைய பாவு தோயும் இடமும், அல்லிக் குளம் இருந்த இடமுமே ஆகும். அவை இன்று T.K.M. நகராக உருவெடுத்துள்ளன.

தியாகி. D.A. ஆதிமூல முதலியார் தலைமையில் அமைந்த குழு தொடர்ந்து கோயில் நடைமுறைகளை நெறிப்படுத்தியது. நாள்தோறும் விளக்கேற்றப்பட்டு பூசைகள் முறைப்படி செய்யப்பட்டன. ஓராண்டில் நடைபெற வேண்டிய விழாக்கள் சீராக நடக்கத் தொடங்கின. மொத்தத்தில் *ஒரு கோயில் மக்களுக்கு உதவியாகவும், மக்கள் கோயில் பணிகளில் ஆர்வம் உடையவர்களாய்க் கோயிலுக்கு உதவியாகவும் இருக்க வேண்டும்* என்பது நடைமுறைக்குத் தன்னால் வந்துவிட்டது. அதனால், கோயில் விரிவாக்கப்பணிகள் தொடங்கி, தொடர்ந்து நடந்தன.

மூவர் குழு ஐவர் குழுவானது :

மூவராய் இருந்து கோயில் சொத்துகளைக் கோயிலுக்கே என ஆக்கினர். அடுத்து தியாகி. D.A. ஆதிமூல முதலியார் தலைமையில் க.வெ. கணபதி முதலியார், K.M. கிருஷ்ணன், M.B. கிருஷ்ணசாமி, K.M. முருகைய முதலியார் ஆகியோர் ஐவர் குழுவாய்ப் பொறுப்பேற்றனர். திரு. M.G. அமிர்தலிங்க முதலியார், B.A.B.L., அவர்கள் தலைமையில் திருக்கல்யாண மண்டபக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தினர். திருமண மண்டபம் ஒன்றைக் கோயிலுக்கு எதிரிலேயே கட்டுவிக்கத் தொடங்கினர். தொடக்கவிழா 07-11-1969 அன்று நடைபெற்றது. தொடக்கவிழா கல்வெட்டு பின்வருமாறு :

குடியேற்றம், புதுப்பேட்டை,
ஸ்ரீ படவேட்டு எல்லையம்மன்
தேவஸ்தானம்
திருக்கல்யாண மண்டபம்
அடிக்கல்நாட்டு விழா
சென்னை, இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறை ஆணையர்
கனம். K.S. நரசிம்மன் முதலியார், I.A.S.,
அவர்களால்

உயர்திரு. K.A. ஷண்முக முதலியார்
அவர்கள் தலைமையில்
சௌமிய வருடம் ஐப்பசி மாதம்
22-ஆம் தேதி **(7-11-69)** வெள்ளிக்கிழமை
அடிக்கல் நாட்டப்பட்டது.
சங்குஸ்தாபனம் K.V. **சுந்தரவேல் முதலியார்**
D.A. **ஆதிமூல முதலியார்**
அறங்காவலர்குழு தலைவர்
K.V. **கணபதி முதலியார்**, அறங்காவலர்
K.M. **கிருஷ்ணன்**, அறங்காவலர்
M.B. **கிருஷ்ணசாமி**, அறங்காவலர்
K.M. **முருகைய முதலியார்**, அறங்காவலர்
M.G. **அமுர்தலிங்க முதலியார்**, B.A.,B.L.,
தலைவர், திருக்கல்யாண மண்டபக்கமிட்டி
S. **தண்டபாணி**, நிருவாக அதிகாரி

தொடக்கவிழாவும் முடிந்தது. அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருமண மண்டபப் பணி திரு. M.G. **அமுர்தலிங்க முதலியார்** அவர்கள் தலைமையில் தொடர்ந்தது.

புதுக்குழு அமைந்தது :

இந்நிலையில் கோயில் அறங்காவலர்குழு திரு. K.T. **மார்கபந்து முதலியார்** தலைமையில் புதிதாக அமைந்தது. அதில் திருவாளர்கள் **கி.வெ. கணபதி முதலியார்**, K.M. **கிருஷ்ணன் முதலியார்**, K.M. **முருகைய முதலியார்**, M.B. **கிருஷ்ணசாமி முதலியார்** ஆகியோர் இடம் பெற்றனர். இவர்கள் காலத்தில் திருமண மண்டபப் பணி முடிக்கப்பட்டு **28-06-1972 புதன்கிழமையன்று** தமிழக முதல்வர், டாக்டர். **கலைஞர். மு. கருணாநிதி** அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திறப்புவிழா பற்றிய கல்வெட்டு பின்வருமாறு :

திறப்புவிழா கல்வெட்டு
படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில்
குடியேற்றம்
திருக்கல்யாண மண்டபத் திறப்புவிழா
பரிதாமி வருடம் ஆனி மாதம் 15-ஆம் தேதி
28-6-1972 புதன்கிழமை
உணவு வருவாய்த்துறை அமைச்சர்
மாண்புமிகு. **ப.உ. சண்முகம்**
அவர்கள் தலைமையில்

மாவட்ட செயலாளர்
திரு. **தோப்பூர். திருவேங்கடம்**, M.A., M.L.A.,
அவர்கள் முன்னிலையில்
தமிழக முதல்வர் மாண்புமிகு.
டாக்டர். கலைஞர். மு. கருணாநிதி
அவர்களால் திறந்து வைக்கப்பட்டது
திரு. K.S. **நரசிம்மன்**, I.A.S., அவர்கள்
ஆணையர், இந்து அறநிலைய பாதுகாப்பு
திரு. K.T. **மார்கபந்து முதலியார்**,
தலைவர், அறங்காவலர் குழு
திரு. **கி.வெ. கணபதி முதலியார்**, அறங்காவலர்
திரு. K.M. **கிருஷ்ணன்**, அறங்காவலர்
திரு. M.B. **கிருஷ்ணசாமி**, அறங்காவலர்
திரு. K.M. **முருகைய முதலியார்**, அறங்காவலர்
திரு. M.G. **அமுர்தலிங்க முதலியார்**, B.A.,B.L.,
நகரமன்றத் தலைவர்,
தலைவர், திருக்கல்யாண மண்டபக் கமிட்டி
திரு. R. **மகாலிங்கம்**, B.Sc.,
நிர்வாக அதிகாரி,

முதல் திருமண மண்டபம் :

குடியாத்தம் நகரில், முதன்முதலில் அமைக்கப்பட்ட திருமண மண்டபம், அருள்மிகு. படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில் திருமண மண்டபமே ஆகும். எனவே, குடியாத்தம் நகர மக்களுக்கு இதன்மீது அளவுகடந்த பற்றும் பாசமும் பெருகிற்று. அன்றுமுதல் இன்றுவரை மக்களின் சமுதாயக் கூடமாகவும் இது பயன்பட்டு வருகிறது. அரசு நிகழ்ச்சிகள் மிகப்பலவும் நிகழ்வது இதன் தனிச் சிறப்பாகும். மக்களின் தேவையைக் கருதி **ராஜேஸ்வரி மில்ஸ் டைனிங் ஹால்** என்ற பெயரால் உணவுக்கூடம் அமைக்கப்பட்டது. 26-08-1987 பொதுமக்களின் நன்கொடையால் திருக்கல்யாண மண்டப மணமேடை அமைக்கப்பட்டது.

5. திருப்பணிக்குழு

இன்று ஒரு குழு வேண்டுமே!

அருள்மிகு. படவேட்டு எல்லையம்மன் கோயில் விமானம் நாளாவட்டத்தில் சிறிது சிறிதாகச் சேதமடையத் துவங்கியது. 1937ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட விமானம் காற்றாலும், மழையாலும், பனியாலும், வெய்யிலாலும் சிறிது சிறிதாகச் சிதைந்து வந்தது. முற்றிலுமாகச் சிதைவதற்குமுன் இத்திருப்பணியை யாராவது மேற்கொள்ளமாட்டார்களா? என்ற ஏக்கம் மக்கள் மனதில் தோன்றியது. எண்ணம் வெளிப்படையான சொல்லாகிச் செயல்வடிவத்துக்குக் காத்திருந்தது. அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருவருளால், அவருக்குரிய கோயிலையே அவர் புதுப்பித்துக் கொள்ளாமல் மாற்றியமைத்துக் கொள்ளத் திருவுளம் கொண்டார் போலும்! விமானத் திருப்பணியை மேற்கொள்ள ஒரு குழு வேண்டுமே!

திருவிழாக் குழு :

கோயிலின் திருவிழாக்களைப் பொதுமக்களின் ஒத்துழைப்போடு சிறப்பாகச் செய்யத் தன்னார்வத் திருவிழாக் குழு ஒன்று பல்லாண்டு காலமாக இயங்கி வந்தது. அதில் விழா ஆர்வலர்கள் அனைவருமே இணைந்து திருத்தொண்டாற்றி வந்தனர். அதன் தலைவராக அமரர். திரு. V.A. **கனகசபை,** B.A., அவர்கள் விளங்கினார்.

தயக்கமும், முயற்சியும் :

விமானத் திருப்பணி என்றவுடன் பலரும் அதில் ஈடுபடத் தயங்கினர், என்றாலும், ஒவ்வொருவராகத் *'தம்மால் முடியாதே! முடியாதே!'* என்ற எண்ணத்தோடு முடிந்தவரை ஒத்துழைக்கலாமென முன்வந்து பணியாற்றினர். விளைந்த முத்துகள் அனைத்துமே சிறந்தவைதாம். இறுதிவரை தம்மையும் அறியாமல் நிலைத்துநின்று சீரிய தொண்டாற்றிய உறுதிவாய்ந்த முத்துகள் இவை.

திருப்பணிக் குழு :

அமரர். திரு. V.A. **கனகசபை,** B.A., அவர்கள் தம் ஆயுள்காலம் வரை திருப்பணிக்குழுவின் தலைவராக இருந்து தொண்டாற்றினார். அவருக்குப்பின், அப்பொறுப்பைத் தம் சிரமேல் தாங்கி நிறைவேற்றியவர் திரு. V.M. **நடராஜ முதலியார்** ஆவார். மேலும், திருப்பணிக்குழுவினர் வருமாறு :

திரு. V.M. **நடராஜ முதலியார்** - தலைவர்
திரு. S.N. **மோகனம் முதலியார்** - செயலாளர்

ஆசிரியர். திரு. N. இரவிச்சந்திரன், M.A., B.Ed., - பொருளாளர்
திரு. R.S. சண்முகம் முதலியார் - மதிப்பியல் தலைவர்
திரு. உப்பு. P.S. சண்முகம் - முன்னாள் அறங்காவலர்
திரு. P.S. இராமன் முதலியார் - திருப்பணி ஆலோசகர்
திரு. V.A.K. பழனி குமார், M.Sc., B.Ed., - துணைத் தலைவர்
திரு. M. கதிரேசன், D.E.E.E., - துணைப் பொருளாளர்
திரு. V.N. சிவப்பிரகாசம், B.Sc., துணைச் செயலாளர்

தெய்வச் செயலால் நிகழ்ந்த அற்புதம் :

விமானத் திருப்பணி எனத் தொடங்கியவர்கள், நன்கொடையாளர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், அறநிலையத்துறை அலுவலர்கள், பொறியாளர்கள், அரசு அலுவலர்கள் திருப்பணி நிறைவு பெற்று, திருக்குடமுழுக்கு விழா நடைபெற வேண்டுமென்று மனதார விரும்பியவர்கள், சிற்பிகள், கொல்லர்கள், பணியாட்கள் முதலானோர்களின் பெரும் ஒத்துழைப்பால் திருக்கோயில் அமைப்பையே மாற்றி அமைத்துள்ளார்கள். இல்லை. இல்லை. தமக்குரிய திருக்கோயில் அமைய, மேற்சொன்ன அனைவர்க்கும் மிகுந்த சக்தியளித்து அன்பர்கள் வாயிலாகத் தமக்குத் தாமே இத்தகைய சிறப்பானதொரு கோயிலை, அருள்மிகு. படவேட்டு எல்லையம்மன் மாற்றி அமைத்துக்கொண்டார். திருக்கோயில் மனிதச் செயலால் நிறைவேறவில்லை, தெய்வச் செயலால் நிகழ்ந்த அற்புதமே ஆகும்.

அன்றும், இன்றும் :

அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் கோயில் பழைய நிலையிலிருந்து, ஆகம விதிமுறைப்படி புதிய மாற்றங்கள் பலவற்றையும் பெற்று புதுப்பொலிவுடன் விளங்குகிறது.

ஆலய முகப்பு வளைவு :

குடியாத்தம், புதுப்பேட்டை, காட்பாடிச் சாலையின் வடபுறம், அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. திருமதி. D.G சகுந்தலா மகள் V.K. ஜெயலட்சுமி உபயம் என்ற பொன்னெழுத்துகளால் ஆன ஆலய முகப்பு வளைவு, பக்தர்களாகிய நம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது. பழமை மாறாமல், புதுவண்ணம் தீட்டிப் புதுப்பிக்கப்பட்ட இந்த முகப்பு வளைவிற்கு 28-11-1982-இல் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கல்வெட்டு பின்வருமாறு :

அருள்மிகு படவேட்டு
எல்லையம்மன் திருக்கோயில்
புதுப்பேட்டை, குடியாத்தம். வ.ஆ.

ஆலய முகப்பு வளைவு
அடிக்கல் நாட்டு விழா
துந்துபி ஆண்டு, கார்த்திகைத் திங்கள்
12-ஆம் நாள் 28-11-1982 ஞாயிற்றுக்கிழமை
காலை 6.00 மணிக்கு
குடியாத்தம், ஸ்ரீ லட்சுமி சரஸ்வதி
மோட்டார் சர்வீஸ் உரிமையாளர்
திரு. R. **ஸ்ரீஹரி** அவர்கள் தலைமையில்,
காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு சங்கராச்சாரிய
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.
இங்ஙனம்,
திரு. S.R. **துரைசாமி**
அறங்காவலர்குழு தலைவர்
திரு. B. **தர்மலிங்கம்**, நிர்வாக அதிகாரி
திரு. A.R. **ஆறுமுகம்**, அறங்காவலர்
திரு. V.K. **வாசுதேவன்**, அறங்காவலர்
திரு. G. **சுகுமார்**, அறங்காவலர்
திரு. K. **இருசன்**, அறங்காவலர்
ஆலய எழுத்தர். திரு. R. **தியாகராஜன்**

அம்மன் கோயிலுக்கு ஓர் அம்மையின் முகப்பு வாயில் :

அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் கோயிலுக்குத் திருமதி. D.G. **சகுந்தலா** மகள் V.K. **ஜெயலட்சுமி** அவர்களால் தம் சொந்தச் செலவில் முகப்பு வளைவு அமைத்து, 01-08-1984 அன்று முடிக்கப்பட்டது. கல்வெட்டு பின்வருமாறு :

அருள்மிகு படவேட்டு எல்லையம்மன்
திருக்கோயில்
புதுப்பேட்டை, குடியாத்தம்.
திருமத. D.G. சகுந்தலா மகள்
V.K. **ஜெயலட்சுமி** அவர்களால்
தம் சொந்த செலவில் கட்டி முடிக்கப்பட்ட
முகப்பு நுழைவு வாயில்
திரு. D.A. **கோவிந்தராஜ் முதலியார்**
அவர்களால்
நிகழும் ரக்தாட்சி ஆண்டு
ஆடித்திங்கள் 17-தும் நாள்

(1.8.1984) புதன்கிழமை
காலை 9.00 மணிக்குமேல்
கும்பாபிஷேகம் செய்து வைத்து
திருப்பணி முடிக்கப்பட்டது.
இங்ஙனம்,
ஆலயத் திருப்பணி கமிட்டியார்கள்.

அம்மன் கோயிலுக்கு முகப்பு வாயில்அமைத்துத் தந்த அம்மையின் திருத்தொண்டினைப் போற்றியவாறு முகப்பு வாயில் வழியாக உள்ளே செல்கிறோம். அமரர். K.M. **கிருஷ்ணன்** நினைவு சொற்பொழிவு மண்டபம் நம் கண்ணெதிரே தெரிகிறது.

சொற்பொழிவு மண்டபம் :

பரந்த வெளியில் கோயிலின் முன்னாலும், திருமண மண்டபத்தின் முன்னாலும், தெற்கு நோக்கியவாறு சொற்பொழிவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அமரர். K.M. **கிருஷ்ணன்** அவர்கள் வசதியான குடும்பத்தில் பிறந்தவர். ஆனால், ஏழைகளின் இன்ப, துன்பங்களில் பங்குகொண்டு உழைத்தவர். அவர் கோயிலின்பால் மக்களை ஈர்த்தவர். கோயில் பணிகள் சிறக்க பலதிறப்பட்ட மக்களின் ஒத்துழைப்பையும் பெற்ற பேருழைப்பாளர். கோயிலின் சார்பாக நடைபெறும் **ஆன்மிக சொற்பொழிவுகள், பாரதச் சொற்பொழிவுகள், நாடகங்கள், தெருக்கூத்துகள்** அனைத்திலும் அவர் பெரும் பங்குபெற்றவர். எனவே, அவர்காலத்துக்குப் பிறகு அவர் நினைவாகக் கோயிலுக்கு வெளியே சொற்பொழிவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. சான்று விபரம் பின்வருமாறு :

அமரர். K.M. **கிருஷ்ணன்**
நினைவு சொற்பொழிவு மண்டபம்
சொற்பொழிவு மேடை கட்ட
நன்கொடைவழங்கியவர்கள் :
நாள் : ஆடி 11 27-07-1990

இதனடியில் நன்கொடையாளர்கள் பெயர்களும், அவர்கள் அன்றளித்த தொகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இறுதியில் பின்வரும் குறிப்புகள் உள்ளன.

இங்ஙனம்,
கமிட்டி மெம்பர்கள்
கவசம்பட்டு. K. **எல்லப்ப செங்குந்தர்**
சப்பாணி N. **நடராஜ் செங்குந்தர்**
மொளைய. V.M. **நடராஜ் செங்குந்தர்**
சுரகண்ட. S.R. **துரைசாமி செங்குந்தர்**
அந்தாரி A. **பெரியசாமி செங்குந்தர்**
ரவாண்டை. R.B. **கங்காதரம் செங்குந்தர்**
R. **தியாகராஜன்**, ஆலய எழுத்தர்.

௬. மூலக்கோயில்

கோபுரமும், விமானமும் :

கோயில் வாயிலின்மீது அமைக்கப்படுவது கோபுரம் எனப்படும். கருவறையின் மீது அமைக்கப்படுவது விமானம் எனப்படும். தஞ்சை பெரிய கோயிலில் அமைந்துள்ளது விமானம் என்பதை இங்கு நினைவில் கொள்ளலாம். அந்த வகையில் அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் கோயிலில் கருவறையின் மீது விமானம் அமைக்கப்பட்டுள்ளது. வாயிலின் மீது சிற்பங்களை அமைக்கவேண்டும். முகப்பு எடுப்பாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு முகப்பினை அன்பர்கள் பலர் தம் நன்கொடை மூலம்
அமைத்துள்ளார்கள். அவர்களின் பெயர்ப்பட்டியல் கல்லில் உள்ளதே தவிர வேறு தகவல்கள் இல்லை. அது முற்றிலுமாக அகற்றப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள முன்வாசல் வழியாக நேரே கருவறை நோக்கிச் செல்கின்றோம்.

விமானமும், மண்டபமும் :

கருவறை சமசதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து நடுமண்டபம் சற்றுப் பெரிய அளவில் சதுரமாக அமைக்கப்பட்டுள்ளது. அதை அடுத்து வெளியே செவ்வக வடிவில் முன்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இவை கருங்கற்களைக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. முன்மண்டபம் பக்கத்துக்கு நான்கு தூண்களாக மொத்தம் எட்டு கல்தூண்களின்மீது போதிகை அமைத்துக் குறுக்குச் சரம் கொடுத்துள்ளனர். நான்கு உத்தரங்கள்மீது கருங்கல் பாறைகளைப் பரப்பி இடைவெளியை சுண்ணாம்பு, கருப்பஞ்சாறு, கடுக்காய் முதலிய கலவையைக் கொண்டு அடைத்துள்ளனர். கருவறையில் மீது குறுக்குக் கருங்கற்பாறைகளைப் பரப்பி அவற்றின்மீது விமானத்தை அமைத்துள்ளனர். அந்த விமானமும், சுண்ணாம்பு, கடுக்காய், கருப்பஞ்சாறு குழம்பைப் பயன்படுத்திச் செங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. முன் மண்டப உத்தரங்களுள் ஒன்றில் காணப்படும் கல்வெட்டு :

உ

சிவமயம்

குடியாத்தம், புதுப்பேட்டை

ஸ்ரீ படவேட்டம்மன் கோயில்

கோபுரம் மண்டபம்

மா. ஆ. சின்னா முதலியார்
பவுத்திரனும், வெங்கடாஜல
முதலியார் குமாரனுமாகிய
M. V. **பீமராஜா முதலியார்**
அவர்களாலும், அவருடைய
குமாரர்களாலும் தம் சொந்த
செலவில் கட்டப்பட்டது.
1937ஆம் வருஷத்திற்குச்
சரியான ஈஸ்வர வருஷம்.

மண்ணாண்டி ராமசாமி முதலியார்
தர்மகர்த்தா

முன்மண்டபத் தூண்கள் நான்கு பட்டைகளாகவும், விளம்புகள் நான்கு சிறுபட்டைகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன. கருவறையைச் சுற்றி மூன்று மாடங்கள் உள்ளன. நடுமண்டபப் பக்கங்களில் இரு மாடங்கள் உள்ளன. மேலும் காற்றுத் துவாரங்கள் பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு உள்ளன.

கல்வெட்டின்மூலம், **மா. ஆ. சின்னா முதலியார்** பேரரும், **வெங்கடாஜல முதலியார்** குமாரரான M.V. **பீமராஜா முதலியாரும்**, அவர்தம் குமாரர்களான M.B. **சுப்பிரமணிய முதலியார்**, M.B. **கிருஷ்ணசாமி முதலியார்**, M.B. **வெங்கடாஜல முதலியார்** ஆகியோரும் கற்கோயிலையும் விமானத்தையும் அமைத்துள்ளனர் என்பதும், அப்போது அறங்காவலராக இருந்தவர் **மண்ணாண்டி ராமசாமி முதலியார்** ஆவார் என்பதும் தெரிய வருகிறது.

பழமையை மாற்றாத புதுமை :

கருவறை, நடுமண்டபம், முன்மண்டபங்களின் கருங்கற்களின்மீது சுண்ணாம்பு, செம்மண் முதலியன பூசப்பட்டுப் பழமை மாறி இருந்தது. பூச்சுகள் அனைத்தும் முற்றிலுமாக அகற்றப்பட்டுவிட்டன. பழைய கற்கோயிலை அப்படியே நம் கண்முன்னால் கொண்டுவந்திருப்பது திருப்பணிக் குழுவினரின் முன்னோர் மொழியையும் அவர்தம் செயல்வடிவங்களையும் போற்றும் நல்ல நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

விமானம் :

திருக்கோயில் விமானத்தைப் பழைய சிற்ப வடிவங்களைப் பின்பற்றிக் காலத்துக்கு ஏற்றவகையில் கம்பி, சிமெண்ட், மணல்,

செங்கற்களைக் கொண்டு அமைத்துள்ளனர். இம்முயற்சியில் திரு. M.V. **பீமராஜ முதலியார்**, திரு. M.A. **கோவிந்தராஜ முதலியார்** குடும்பத்தினர் பெரிதும் உதவியுள்ளனர். அவர்களுக்கும் திருப்பணிக்குழுவினர்க்கும் நன்றியும் பாராட்டும் தெரிவித்து நாம் அம்மனை வணங்கி மகிழ்கிறோம்.

கருவறை நிலை அம்மன் :

கருவறைப் பக்கம் செல்கிறோம். ஏற்கனவே கருவறை நிலையம்மன் மரத்தால் ஆக்கப்பட்டிருந்தார். தற்போது தகுதி வாய்ந்த கல்லால் ஆக்கப்பட்டிருக்கிறார். அம்மன் வடிவழகில் மெய்சிலிர்த்திருக்கின்றோம். பழைய வடிவம் மாற்றாமல் செய்திருக்கும் சிற்பியின் கைவண்ணத்தைப் பாராட்டவா! நிலை அம்மன் அமைய திருப்பணிக்குழுவினருடன் பெரிதும் உதவிய திரு. C. **சம்பங்கி - ஜீவா** தம்பதியினர் - S. **மருது பாண்டியன்** அவர்களையும் போற்றவா! அம்மன் திருவருளை அவர்களுக்குப் பெற்றுத்தந்த திருப்பணிக்குழுவினரைப் புகழ்வதா! என எண்ணிக் கொண்டிருக்கும்போது அம்மன் அருள்பார்வையால், கனிவான தோற்றத்தில் நம்மை நாம் மறந்து நிற்கிறோம். *'ஐயா! பிரசாதம்!'* என்ற குரலால் சுய நினைவு வரப்பெற்று விம்மிதம் அடைகிறோம்.

துளைக்கிணறு :

கோயில் பணிகள் சிறக்க நீர் வேண்டும். பூசைக்கும் பிறவற்றுக்கும் உதவிய குளம் வற்றிய பிறகு கோயிலின் உள்ளே வடகிழக்கு மூலையில் சேந்துகிணறு தோண்டப்பட்டது. அந்தக்கிணற்றுத் தண்ணீரைக் கொண்டுதான் திருமணமண்டபக் கடைக்கால் அமைக்கப்பட்டது. வந்து தங்குவார்க்கும் நீரீந்த கிணற்றில் நீர் ஆழத்துக்குச் செல்லவே கிணற்றுநீரை இறைத்துப் பயன்படுத்த மின்மோட்டாரை திரு. R.G. **நாகப்ப முதலியார்** அமைத்துக் கொடுத்துள்ளார். அதைப்பற்றிய குறிப்பு ஒன்று கோயில் சுவரில் இருந்தது. திருப்பணியின்போது மறைந்துள்ளது.

கிணற்று நீர் போதாதென எண்ணிய வேளையில், அம்மன் அருளால் அவர் அருள்பெற நகரில் துளைக்கிணறு அமைக்கும் இயந்திரத்தோடு கூடிய புதிய வண்டி *முதல்* பூசைக்கென வந்து நின்றது. அதன் உரிமையாளர், *'எனக்கு அம்மன் அருளால் நல்ல வாய்ப்பு கிடைத்தது'*, என்று கூறியதோடு திருப்பணிக்குழுவினரின் உதவியோடு துளைக்கிணறு ஒன்றைக் கோயில் காணிக்கையாக அமைத்துக் கொடுத்த அதிசயத்தைப் போற்றிப் பலரும் துதித்தனர்.

7. பரிவாரக் கோயில்கள்

விநாயகர், ஐயப்பன், துர்க்கை :

1968 ஆம் ஆண்டு , கார்த்திகை மாதம் முதல் நாளன்று பரிவாரக் கோயில்களாக விநாயகர், ஐயப்பன் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவ்விரண்டும் கிழக்கு நோக்கி அமைந்தவை. பக்கத்தில் துர்க்கை கோயில் வடக்குநோக்கி அமைக்கப்பட்டது. ஐயப்பன் மூலவர், உற்சவர் திருமேனிகள் அமைந்தன. அன்று அவற்றுக்கு உதவியாக இருந்தவர் திரு. K.M. கிருஷ்ணன் என்ற குறிப்பு கிடைக்கிறது.

விநாயகர் :

இன்று கோயிலின் தென்கிழக்குத் திசையில் வடக்கு நோக்கி விநாயகர் கோயில் எழுப்பப்பட்டுள்ளது. இக்கோயில் அமைய திருப்பணிக்குழுவின் தலைவராக இருந்த அமரர். திரு. V.A. கனகசபை, B.A., அவர்களின் தம்பி திரு. V.A. நடனசிகாமணி குடும்பத்தினர் திருப்பணிக்குழுவினரோடு பெரிதும் ஒத்துழைத்துள்ளனர்.

வேப்பமரம் :

விநாயகர் சன்னதியை அடுத்து அதன் மேற்கில் பழமைவாய்ந்த வேப்பமரம் உள்ளது. இது ஒரு காலத்தில் கோயிலின் சுற்றுச்சுவருக்கு வெளியே இருந்தது. அந்த மரத்தைச் சுற்றிலும் மேடையமைத்து வணங்கி வந்தனர். சொப்புக்கொழுக்கட்டைகளில் நல்லெண்ணெய் ஊற்றித் திரியிட்டு மகளிர் மாலை நேரங்களில் படைப்பர். சோராக்கி, கத்தரிக்காய் கறி(மிளகு)க் குழம்பு வைத்து, முருங்கைக்கீரை, கொள்ளுப் பருப்புக் கடையல், பிடி சொப்புக் கொழுக்கட்டை, பிறக் கொழுக்கட்டை முதலியன கொண்டு வருவர். வேப்பமரத்தைச் சுற்றிவந்து படையலிட்டு வணங்குவர். படையலிட்ட உணவு வகைகளை ஒன்றாக்கிப் பிசைந்து அனைவர்க்கும் கொடுத்து மகிழ்வர்.

சுதந்தரப் போராட்டமும், வேப்பமரமும் :

இந்திய சுதந்தரப் போராட்டங்களுக்கும், அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் கோயிலுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவலுவலகம், சார் கருவூலங்கள் இருந்தன. இன்றும் உள்ளன. இன்றுள்ள தீயணைக்கும் நிலையமும், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியமும் இல்லாத காலம். குற்றவியல் நீதிமன்றம், தற்போதுள்ளது போலவே அன்றும் இருந்தது. கிளைச் சிறை மட்டும் சுற்றுச்சுவர் இல்லாமல் திறந்தவெளியாக

இருந்தது. காலையில் கடன்கழிக்கவும், குளிக்கவும் காலை உணவருந்தவும், நன்பகல் உணவருந்தவும், மாலை உணவருந்தவும் கைதிகளை அவரவர் அறைகளிலிருந்து வெளியே அழைத்துவருவர். இதை எல்லோரும் அச்ச உணர்வோடு காண்பர்.

கள்ளுக்கடை மறியல் :

இன்றைய காங்கிரஸ் வீட்டுத் தெருவில் இருந்த கள்ளுக்கடை முதலியன சுதந்தரப்போராட்ட வீரர்களால் கொளுத்தப்பட்டன. மறியல்கள் தொடர்ந்தன. அதனால், நகரில் பல்வேறிடங்களில் கைது செய்யப்பட்ட வீரர்கள் குடியாத்தம் குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர். கைதிகளாக உறவினர்களைக் கண்ட புதுப்பேட்டை வாசிகளுக்கும், வெள்ளையர்களாகிய காவலர்களுக்கும் எப்படியோ பூசல் அரும்பியது. சண்டையாக மாறியது. புதுப்பேட்டை வாசிகளும், பிறரும் காவலர்கள் மீது கற்களை வீசினர். நெசவுத் தொழிலுக்குப் பயன்படும் அலகுகளையும், கழிகளையும், பாசக்கம்பி களையும், கயிறுகளையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தினர். அஞ்சிய காவலர்கள் தம் துப்பாக்கிகளால் சுட ஆரம்பித்தனர்.

வீரத்தழும்பேற்ற வேப்பமரம் :

துப்பாக்கிக் குண்டுகளுக்கு அஞ்சியவர்கள், படவேட்டு எல்லையம்மன் கோயிலை அரணாக்கிக் கொண்டனர். இந்தப் போராட்டத்தில் **வரதன்** என்ற தியாகி துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டுத் தன் இன்னுயிரை இந்த நாட்டுக்காக ஈந்தார். அதே துப்பாக்கிகளின் **குண்டுகளைத் தாங்கிய இந்த வேப்பமரம்** எண்ணற்ற வீரர்களின் இன்னுயிரைக் காப்பாற்றியது. வெள்ளையரின் துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கிய வேப்பமரமே, அருள்மிகு படவேட்டு எல்லையம்மனுக்குத் (ஆலயமரமாக) **தல விருட்சமாக** பக்தர்கள் அனைவர்க்கும் அருள்பாலித்து வருகிறது.

துர்க்கையம்மன் திருக்கோயில் :

வீரத்தழும்பேற்றுக் குண்டுகளைத் தாங்கிக்கொண்டுள்ள வேப்ப மரத்துக்குப் பக்கத்தில் துர்க்கையம்னுக்குக் கோயில் அமைந்துள்ளது. பழையதும், அளவில் சிறியதுமாக இருந்த துர்க்கை கோயில் முற்றாக அகற்றப்பட்டு, இராகு காலப் பூசை மகளிர் அணியினர் கடும் உழைப்பாலும், உதவியாலும் திருப்பணிக்குழுவினரால் எழுப்பப் பட்டுள்ளது. இக்கோயிலில் மகளிர் நாள்தோறும் திரண்டு இராகு காலத்தில் பக்திப்பாடல்களைப் பாடியும், **எலுமிச்சை (தோல்) ஓடுகளில் விளக்கேற்றியும்** பூசைசெய்யும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்பவர்,

துர்க்கையின் அருளை மிகப் பெற்றவரே ஆவர். குறிப்பாக வெள்ளி, ஞாயிறு, செவ்வாக்கிழமைகளில் நடைபெறும் **இராகுகாலப் பூசைகள்** போற்றுதலுக்கு உரியனவாகும்.

ஐயப்பன் சன்னதி :

இத்திருக்கோயிலில் அமைந்திருக்கும் ஐயப்பன் சன்னதி கோயிலின் வடமேற்கு மூலையில் உள்ளது. முன்பு அளவில் சிறியதாகவும் எளியதாகவும் விநாயகருக்கு மிக அருகாமையிலும் இருந்தது. தற்போது, கேரள மாநிலச் சபரிமலையில் அமைந்திருக்கும் ஐயப்பன் சன்னதியைப் போலவே அமைக்கப்பட்டுள்ளது. ஐயன் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார்.

1968 முதல் ஐயப்பன் :

ஐயப்ப பக்தர்கள் ஒன்றுகூடி, ஆலயத்தில் மாலையணிந்து இருமுடி தாங்கி, சபரிமலைக்குப் புனிதப் பயணமாகச் சென்று வந்தனர். இவர்கள் முயற்சியால் 1968-ஆம் ஆண்டு ஐயப்பனுக்குப் பரிவாரக் கோயில் எழுப்பப்பட்டது. மூலவர், உற்சவர் திருமேனிகள் அமைந்தன. குடமுழுக்கு விழா நேரத்தில் **திருமுருக கிருபானந்த சுவாமிகள்** இங்கே எழுந்தருளி பக்திச் சொற்பொழிவாற்றினார். **கவிஞர் கண்ணதாசன்** பக்தி மார்க்கத்திற்குத் திரும்பிய நிலையில் இங்கே வந்து சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். அதன்பிறகே, *அர்த்தமுள்ள* **இந்துமதம்** என்ற அற்புத நூலை எழுதினார் என்று சான்றரிந்த ஆன்றோர் கூறுவர். **காரைக்குடி அருணாசலம், வளையப்பட்டி சுப்பிரமணி, ஷேக் சின்ன மௌலானா** போன்ற இசைக்கலைஞர்கள் இங்கே சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் கார்த்திகை மாதங்களில் ஐயப்பசுவாமிகளின் **கன்னிபூசையும், தீமிதித் திருவிழா** நடைபெறுவது மிகச் சிறப்புக்குரியதாகும்.

இன்றைய நிலை . . .

இன்று ஐயப்பன் சன்னதி அழகுற அமைக்கப்பட்டுள்ளது. **அகிலபாரத ஐயப்ப பக்த சேவா சங்கத்தினர்** பெருமுயற்சியாலும், உதவியாலும், திருப்பணிக் குழுவினராலும், பொதுமக்களாலும் ஐயப்பன் சன்னதி மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

திருமுருகன் திருச்சன்னதி :

கோயிலின் வடமேற்கு மூலையில் இன்று திருமுருகன் திருச்சன்னதி அமைந்துள்ளது. முருகர், வள்ளி,

தெய்வயாணையரோடு எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். கோலியின் வடகிழக்குத் திசையில் முருகர் சன்னதி 1970-இல் அமைக்கப்பட்டது.

1970ஆம் ஆண்டு, முருகர் சன்னதி அன்றைய அறங்காவலர் குழுத்தலைவர் திரு. K.T. மார்க்கபந்து முதலியார் அவர்களின் முன்முயற்சியால் அமைக்கப்பட்டது. அதைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்பு வருமாறு :

ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி
ஆலயத்துக்கு
நன்கொடை அளித்த அன்பர்கள்
நூல் மற்றும் லுங்கி
வியாபாரம் கவசம்பட்டு
தங்கவேல் முதலியார் குமாரர்
மார்க்கபந்து முதலியார் மனைவி
ருக்மணி அம்மாள் ஞாபகார்த்தமாக
ரூ.2501/- மற்றும்
குடியேற்றம் நகர் அன்பர்கள்
26-10-1970 திங்கட்கிழமை
காலை 9.30 மணிக்கு
அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்
சிறப்பாக நடைபெற்றது.
நிர்வாகிகள்.

இக்கல்வெட்டுக் குறிப்பிலிருந்து திரு. K.T. மார்க்கபந்து முதலியார், அன்று ரூ. 2501/- நன்கொடையாக அளித்துத் தொடங்க அன்பர்கள் பலர் பொருளுதவி செய்து முருகர் சன்னதியை அமைத்துள்ளனர். 26-10-1970 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்குத் திருக்குடமுழுக்கு விழா செய்யப்பட்டுள்ளதாக நாம் அறிகிறோம். முருகர் சன்னதி அமைந்த நாள்முதல், வசதி படைத்தவர்கள் திருமண நிகழ்ச்சியை நடத்த ஆலயத் திருமண மண்டபத்திலும், வசதி இல்லாத ஏழைகள் தங்கள் இல்லத் திருமண நிகழ்ச்சியை எளிதாக நடத்திக் கொள்ள முருகர் சன்னதியும் பயன்படுத்தத் தொடங்கினர். ஆக படவேட்டு எல்லையம்மன் கோயிலிலும் திருமண நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கியது சிறப்புக்குரியதாகும்.

குடமுழுக்கின் தொடர்ச்சி :

திரு K.T. மார்க்கபந்து முதலியார் தலைமை அறங்காவலராக இருந்த காலத்தில் அம்மனுக்குக் குடமுழுக்கு நடைபெற்றதாகத் தெரியவருகிறது. முருகர் சன்னதி குடமுழுக்கின்பின் முருகர் உற்சவ விக்கிரகம் அமைக்கப்பட்டது. மார்கழி மாதங்களில் திருப்பாவை,

திருவெம்பாவை தொடர்ந்து மூன்றாண்டுகள் பாடப்பட்டன. காஞ்சி விநாயக முதலியார், புலவர். கீரன், நாகை முருந்தன், நாமக்கல் ருக்மணி அம்மாள் முதலியோர் சொற்பொழிவாற்றியுள்ளனர். தொடர்ந்து கார்த்திகை விழாவும், கந்தர் சஷ்டி விழாவும் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய திருமுருகன் சன்னதி:

தற்போது கோயிலின் வடமேற்கில் திருமுருகன் சன்னதி அமைந்துள்ளது. முருகர், வள்ளி தெய்வயானையரோடு எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். சன்னதியை அமைக்கத் திருப்பணிக்குழுவின் தற்போதைய தலைவர், பால்காரர் திரு. V.M. நடராஜ முதலியாரும், அவர்தம் குடும்பத்தினரும், குடும்ப வகையறாவைச் சேர்ந்தவர்களும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். இவர்களோடு தோளொடு தோள் நின்று பொதுமக்கள் உதவத் திருப்பணிக் குழுவினரால் சிறப்பாக இப்பணி முடிக்கப்பட்டது. இன்றைய சூழ்நிலையில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெறவும் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெறவும் திருமுருகர் அருள்பாலித்துள்ளார்.

திருவேங்கடத்தான் :

ஆலய புணரமைப்புக்கு முன்பு திருக்கோயில் முன்மண்டப வடபுறச்சுவரில் புடைப்புச் சிற்பமாகத் திருவேங்கடத்தாராகிய வேங்கடாஜலபதி சங்கு, சக்கரபாணியாக எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இன்று கோயிலின் வடபுறச்சுவரின் நடுவில் புடைப்புச் சிற்பமாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். நேர் எதிரே பக்த ஆஞ்சநேயர் திருவேங்கடத்தாரை யோக நிலையில் வணங்கியவாறு இருப்பது பக்தர்களுக்கு விம்மிதம் அளிப்பதாக உள்ளது.

நவக்கிரக ஆலயம் :

வேங்கடத்தாரை வணங்கிச் சற்றுத் தலை திரும்பிய உடனே, நவக்கிரக ஆலயம் நம் கண்களையும் கருத்தையும் கவர்கிறது. முன்பு கோயிலின் வடப்புறம் நடுவில் இருந்தமை முற்றிலுமாக மாற்றித் தற்போது வடகிழக்குத் திசையில் அமைக்கப்பட்டுள்ளது. இது சென்னை, திரு. S. திருநாவுக்கரசு அவர்களின் பேருதவியோடு திருப்பணிக் குழுவினரால் அமைக்கப்பட்டதாகும். ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய நவக்கிரக நாயகர்கள் அனைவரும் தத்தம் தேவியரோடு, தம்பதி சமேதராய் அமைக்கப்பட்டிருப்பது ஓர் அற்புதக் காட்சியாகும். கிரக

தோஷங்கள் நீங்கி, விரத பலன்கள் பெற்று, துன்பங்களில்லா சுகவாழ்வு பெறலாம் என்ற எண்ணத்தை மனதில் பதித்துத் துதிக்கின்றோம்.

வேணுகோபாலன் :

மகிழ்ச்சிப் பெருக்கோடு திரும்பும் நம்மை, **வேணுகோபாலசாமி** அருள்பாலித்து வியப்பில் ஆழ்த்துகிறார். புல்லாங்குழலிசைத்துப் பசுவைத் தம் வயமாக்கிக் காட்சிதரும் அவர் நமக்குச் சில கருத்துக்களைச் சொல்லாமல் சொல்கிறார். கடவுள் பசுக்களாகிய உயிர்களை ஓம் எனும் நாதசக்தியால் பிணைத்து **ஆகாயம், காற்று, நிலம், நீர், நெருப்பு** ஆகிய ஐம்பூதங்களையும் உண்டாக்கிக் காப்பாற்றுகிறார் என்ற கருத்தை எல்லோருடைய மனதிலும் எழுப்புகிறார். இந்த தத்துவத்தைப் புரிந்துகொண்ட மனநிறைவோடு ஆலய நுழைவு மகா மண்டபத்துக்கு வந்தமர்கிறோம்.

ஆலய நுழைவு மகா மண்டபம் :

எட்டு லட்சுமிகள் எட்டுத் தூண்களை அலங்கரிக்கும் ஆலய நுழைவு மண்டபத்திற்கு வருகிறோம். இந்த மகா மண்டபத்தைத் திருப்பணிக் குழுவினர் அமைத்துள்ளனர். **குஞ்சா மாணிக்க முதலியார் குடும்பத்தினர்** உதவியுள்ளார்கள். அத்துடன் பொதுமக்களின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளதென அறிந்து மகிழ்கின்றோம். எட்டு இலட்சுமிகளின் திருவருளும் அவர்களுக்குக் கிடைப்பதாகுக என வாழ்த்துகிறோம்.

தரைதளம் :

ஆலய அமைப்பில் மனதைப் பறிகொடுத்த நாம் அம்மன் அருள்வேண்டித் துதித்தவாறு தரையில் அமர்கிறோம். இல்லை! இல்லை!! கிராணைட் கல் பதிக்கப்பட்ட வழவழப்பான தரை நம்மை நிலை குலைய வைக்கிறது. பெரும்பொருள் செலவிட்டு ஆலயத்தரை முழுவதையும் கிராணைட் கற்களால் மூடி அமைத்த உள்ளங்களைப் பாராட்டுகிறோம். ஒரு காலத்தில் தரைதளம் அமைக்க வாய்ப்பு இல்லாமல் போன நிலையை எண்ணி வருந்துகிறோம். அல்லிக்குளத்தின் படிக்கற்களைப் பெயர்த்து எடுத்து வந்து கோயில் தரைதளம் முழுவதையும் மூடிப்பரப்பிய உள்ளங்களையும் தற்போது தரைதளம் அமைக்கப் பேருதவி புரிந்த திரு. Dr. R.A. **சுப்பிரமணியன்**, திருமதி. **சகுந்தலாம்மாள்**, திருமதி. S. **காந்திமதி சிவப்பிரகாசம்** முதலானோரை உலகம் உள்ளளவும் புகழ்பெற்று வாழ்க என வாழ்த்தி மகிழ்கின்றோம்.

மேல்தளம் :

கோயிலின் மேல்தளத்திற்குப் படியேறிச் செல்கிறோம். இறைவியின் அருள்பெற்று விண்ணுலகிற்குச் செல்ல அமைத்த படிகள் என்றே அவற்றைப் பற்றி நினைக்கின்றோம். விமானத்தின் வேலைப்பாடுகளைக் கண்டு **விமானத்தரிசனம் கோடிப் புண்ணியம்** என்று எண்ணுகிறோம். 'நீரின்றி அமையாது உலகு' என்கிறது திருக்குறள். ஆம்! உணவுப் பொருள்களை உயிர்களுக்கு ஆக்கித்தந்தும், தானே உணவாகியும் நம்மைக் காப்பது தண்ணீரல்லவா? அந்தத் தண்ணீரைத் தேக்கி பக்தர்களுக்கு அளிக்க உதவி புரிந்துள்ளனர், திரு.V.N. **சிவப்பிரகாசம்**, B.Sc., - **அமுதா** தம்பதியினர். மேலும், அவர்கள் ஆழ்துளைக்கிணற்றிலிருந்து நீர் இறைத்துக்கொள்ள மின் மோட்டாரையும் அமைக்க உதவி புரிந்துள்ளனர்.

வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழ்க!

70 ஆண்டுகளுக்குப் பிறகு அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில் எல்லோருடைய முயற்சியாலும், உதவியாலும் புணரமைக்கப்பட்டு, **சர்வஜித்து ஆண்டு ஆவணி மாதம் 13-ஆம் நாள் (30-08-2007) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள், திருக்குடமுழுக்கு விழா** கண்டது, பெரிதும் போற்றத் தக்கதாகும். இப்பணியில் தங்களை எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் ஈடுபடுத்திக் கொண்ட அனைவரையும் **வாழ்க! வாழ்க! பல்லாண்டு பல வளங்கள் பெற்று வாழ்க!** என நெஞ்சார வாழ்த்தி மகிழ்வோமாக.

இட்டிகை ஒன்றிற் கேனும்
இனிதொரு சிலைக்கே வேணும்
கட்டிய விலைதந் தோரும்
கைத்தொழில் இழைத்திட் டோரும்
பட்டொளி மருங்குல் பாகன்
கைலையில் பசும்பொன் மேலே
விட்டில் அமைத்தொளிரத் தேவர்
வணங்க வீற்றிருப்பார் நன்றே!

இட்டிகை = செங்கல், சிலை = கருங்கல்

8. திருவிழாக்கள்

திருவிழாக்கள்

அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் திருக்கோயிலில் திருவிழாக்கள் நிறைவாக நடத்தப்படுகின்றன.

சித்திரை முதல் நாளில் **தமிழ்ப்புத்தாண்டுப் பிறப்பு**, ஆடி மாதம் வெள்ளிக்கிழமைகளில் **ஆடிவெள்ளிவிழா, ஆடி 18**-ஆம் நாளில் **தேர்த்திருவிழா**, ஆவணியில் **பிள்ளையார் சதுர்த்தி விழா**, புரட்டாசியில் **நவராத்திரி விழா**, ஐப்பசியில் **மகா கந்தர் சஷ்டி விழா**, முழுநிலா நாளில் **அன்னாபிஷேக விழா**, கார்த்திகையில் **மகாதீப விழா**, கார்த்திகை, மார்கழி மாதங்களில் **ஐயப்பன் இருமுடி விழா**, தை மாதத்தில் **பொங்கல் விழா, உக்கல்நாதன் விழா** முதலியன முறையாக நடைபெறுகின்றன.

ஆடி விழா :

திருக்கோயிலின் மிக முக்கியவிழா, ஆடி மாதம் 18-ஆம் நாளில் நடக்கும் திருத்தேர் விழாவே ஆகும். இவ்விழாவினை முன்னிட்டுக் **காப்புக்கட்டுதல், பொங்கலிடுதல், திருத்தேர் வீதி உலா, பூப்பல்லக்கு** முதலிய குறிப்பிடத்தகுந்த விழாக்கள் நடைபெறுகின்றன.

ஐயப்பன் விழா :

கார்த்திகை மாதம் முதல் நாளில் சுற்றுவட்டக் கிராம ஐயப்ப பக்தர்கள் உள்பட எல்லோரும் வந்து மாலை அணிந்து கோயிலில் விரதம் மேற்கொள்வர். கார்த்திகை 18-ஆம் நாள் வரை மாலை அணிந்துகொள்வது வழக்கமாக உள்ளது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் சனிக்கிழமைகளில் **கன்னிபூசை** சிறப்பாக நடைபெறுகிறது. சபரிமலை பயணத்தை முன்னிட்டு வினாயகர், அம்பாள், திருமுருகர், ஐயப்பன், ஆஞ்சநேயர் **சுவாமிகளின் திருவீதி உலாவும், தீ மிதித் திருவிழாவும்** நடைபெறுகின்றன.

உக்கல்நாதன் விழா :

செங்குந்தர் குலத்தைச் சேர்ந்த முருக பக்தனான உக்கல்நாதன் ஒரு கைத்தறி நெசவாளன். மிக நுணுக்கமான துணிகளைத் தயாரிப்பதில் வல்லவன். ஒரு மீட்டர் துணியை மடித்து ஒரு சிறிய தீப்பெட்டிக்குள் வைக்கும் அளவில் மெல்லிய துணியை நெய்வதில் சிறந்தவன். தன் கைவல்லமையால் தான் தயாரித்த மெல்லிய துணிகளை எல்லா அரசர்களுக்கும் கொடுத்துப் புகழ்பெற்றான். இவன் வாழ்ந்த பகுதியை ஆண்ட அரசன் தனக்கு மட்டுமே மெல்லிய துணிகளைத் தரவேண்டும் என்றான். உக்கல்நாதன் அரசன் ஆணைக்குப் பணியவில்லை. எனவே, அரச கட்டளையால் அவன் பெருவிரல் துண்டிக்கப்பட்டது. அப்படியும் உக்கல்நாதன்

தான் மெல்லிய துணிகளைத் தயாரிப்பதை விடவில்லை. இறுதியில் உக்கல்நாதனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தன்மானத்தை இழக்காமல், தண்டனையை ஏற்று உத்தமனாய் வாழ்ந்த உக்கல்நாதன் நினைவாக ஒவ்வொரு தை மாதமும் கைத்தறி நெசவாளர்கள் உக்கல்நாதனுக்குப் **பொங்கல் வைத்தும், கும்பம் ஆக்கியும் கூழ் ஊற்றியும்** நினைவு விழா எடுத்தபிறகே தம் தொழிலைத் தொடங்குவர். குடியாத்தம், புதுப்பேட்டை பகுதி நெசவாளர் நிறைந்த பகுதியாகும். அவர்கள் பொங்கல் நாட்களில் ஓய்வாக இருந்து தை மாதம் பத்து நாட்களுக்குப் பிறகு அருள்மிகு படவேட்டு எல்லையம்மன் கோயிலில் உக்கல்நாதன் விழா எடுத்து வருகின்றனர். இந்த விழா பழமையும், பெருமையும் வாய்ந்ததாகும். திருக்கோயிலின் மிக முக்கிய விழாக்களுள் ஒன்றாக இது விளங்குவது குறித்து மக்களின் நன்றியுணர்வைப் போற்றுகிறோம்.


௯. ஆலய தரிசனம்

ஆலய தரிசனம் :

குளித்து, தோய்த்துலர்ந்த ஆடையை அணிந்துகொண்டும், நெற்றியிலே விபூதி இட்டுக் கொண்டும் கோயிலுக்குச் செல்லவேண்டும். சிவ நாமங்களை உச்சரித்தவாறு திருக்கோபுரத்தைத் தரிசிக்க வேண்டும். பலிபீடத்துக்கு இப்பக்கம் நின்று வணங்கவேண்டும். கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதானங்களில் வடக்கே தலை வைத்து வணங்க வேண்டும். மற்ற சந்நிதானங்களில் கிழக்கே தலை வைத்து வணங்க வேண்டும். ஆண்கள் தம் எட்டு உறுப்புகளும், பெண்கள் தம் ஐந்து உறுப்புகளும் தரையில் படுமாறு விழுந்து வணங்க வேண்டும். (**எட்டுறுப்புகள்** = தலை, கைகள் இரண்டு, காதுகள் இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு, **ஐந்துறுப்புகள்** = தலை, கைகள் இரண்டு, முழந்தாளிரண்டு என்பனவாம்). மூன்றுதரம், ஐந்துதரம், ஏழுதரம் அல்லது ஒன்பதுதரம் வணங்க வேண்டும். கருவறையை அடைந்து வணங்கி *சிவாயநம* பலமுறை சொல்லியவாறு எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகள், பிரதோஷம், முழுநிலாநாள், அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி முதலிய காலங்கள் புண்ணியக் காலங்களாகும். அப்போதெல்லாம் கட்டாயம் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"



அருள்மிகு

படவேட்டு எல்லையம்மன்



அருள்மிகு
படவேட்டு எல்லையம்மன் திருக்கோயில்
புதிய முகப்பு
அருள்மிகு
படவேட்டு எல்லையம்மன்
திருக்கோயில்
புதுப்பேட்டை குடியாத்தம்
HINDUSTAN, 0'94433 90334